Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12426)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-22 | 07-08-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-170

## குடியிருப்புப் பகுதிகளில் இராணுவ நடமாட்டம் மக்களை அச்சுறுத்தும் ஒரு செயலாகும்

### சாந்தரூபனின் கொலைக்கு யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்

தொடர்ந்து தலைவிரித்தாடும் இராணுவ அடாவடித் தனங்களை வன்மையாகக் கண்டிக்கிறோம். கடந்த வியாழக்கிழமை இணுவில் பகுதியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தில் புகுந்து சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் அந்நிலையத்தில் பணிபுரிந்த ஜெயசீலன் சாந்தரூபன் என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார். மற்றும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இராணுவத்தின் இவ் அடாவடித்தனச் செயலை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாக கண்டிக்கின்றது. மக்கள் குடியிருப்புப் பகுதிகள், மக்கள் அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடும் இடங்களில் சிறிலங்காப் படையினர் நடமாடுவது மட்டுமன்றி ஆயுதங்களையும் தயார் நிலையில் கொண்டு செல்வதும் மக்களை அச்சுறுத்தும் ஒரு செயலாகும் என யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் போர் நிறுத்த ஒப்பந்த

(!2 ஆம் பக்கம் பார்க்க)

### ஓமந்தை சோதனைச்சாவடியில்

## வனவளப் பாதுகாப்புப் பிரிவு பணியாளர்கள் மீதுதாக்குதல்

ஓமந்தை இராணுவச் சோதனை நிலையத்தினூடாக நேற்றுப் பயணம் செய்த வனவளப் பாதுகாப்புப் பிரிவு பணியாளர்கள் இருவர் மீது இராணுவ புலனாய்வாளர்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

ஓமந்தை இராணுவச் சோதனை நிலையம் ஊடாக பயணிக்கும் பொதுமக்கள் மீது அண்மைக்காலமாக கெடுபிடிகளையும், விசாரணைகளையும் அதிகரித்து வரும் இராணுவப் புலனாய்வாளர்கள் அதனூடாகப் பயணம் செய்த வனவளப்பாதுகாப்புப் பிரிவுப் பணியாளர்கள் இருவர் மீது கடும் விசாரணைகளை மேற்கொண்டதுடன், அவர்கள் மீது தாக்குதலையும் மேற்கொண்டுள்ளனர்.

(!2 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பொலிஸ் நிலையங்களை உசார் நிலையில் இருக்க உத்தரவு!

## நேற்று யாழ். விஜயம் செய்த பொலிஸ்மா அதிபர் பணிப்பு



*யாழ். மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள பொலிசாரை உசார் நிலையில் வைத்திருக்குமாறு சிறிலங்காப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோ யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களினது பொறுப்பதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். நேற்று யாழ்.சென்ற இவர் இவ் உத்தரவை நேரில் பிறப்பித்தார்.*

அத்துடன் பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பையும் பலப்படுத்தி உறுதி செய்யுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ காங்கேசன் துறையிலுள்ள யாழ் மாவட்ட பொலிஸ் தலைமையகத்தில் வைத்து யாழ். மாவ்ட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளையும் மாலை 5.00 மணிக்கு சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

முன்னதாக விமானப்படை விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்த பொலிஸ்மா அதிபர் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனை பாலாலி படைத்தலைமையகத்தில் சந்தித்தார்.

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே,இலங்கை தேர்தல்கள் காரணமாக சமாதான முயற்சிகள் தடைப்படலாம்

இலங்கையிலும், நோர்வேயிலும் தற்போது ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்களினால் சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தராக பணியாற்றி வரும் நோர்வேயூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் சில மாதகாலத்திற்கு தடைப்படக்கூடிய அறிகுறிகள் தோன்றியிருப்பதாக அரசியல் வட்டாரத்தகவல்கள் தெரிவிககின்றன.

இலங்கையில் தற்போது நிலவும் சனாதிபதித் தேர்தல் சூழல் மற்றும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள நோர்வே பொதுத்தேர்தல் என்பன இந்த நிலைக்கான காரணமாக இருப்பதாகவும் அந்த அரசியல் வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள நோர்வே பொதுத்தேர்தலில் அந்நாட்டு நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படா விட்டாலும் தேர்தலுக்கு முகம் கொடுத்தல் அதன் பின்னர் அரசியல் ரீதியான செயற்பாடுகள் போன்றவற்றுக்காக அந்நாட்டிற்கு காலஅவகாசம் தேவைப்படுவதால் இலங்கையின் சமாதான முயற்சிகளில் காலத்தை செலவழிக்க அவர்களுக்கு முடியாமலிருக்குமென அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## சார்ள்ஸ் விஜேவர்த்தன கொலை விசாரணை விசேட புலனாய்வுக்குழு யாழ்.வருகை

யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக விசேட புலனாய்வுத்துறையினர் அடங்கிய குழு ஒன்று யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்துள்ளது.

நேற்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள இப்புலனாய்வுக்குழுவினர் வரும் ஒரு வாரத்திற்கு யாழ்.குடாநாட்டில் தங்கியிருந்து விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோவின் பணிப்புரையின் பேரில் யாழ்.குடாநாட்டுக்கு வந்துள்ள இக்குழுவினர் பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன கடத்திக் கொலை செய்யப்பட்டவேளை அவருடன் சென்ற மெய்ப்பாது காவலர்கள் மற்றும் பொலிஸ் படையினர் மீதும் சம்பவ இடத்தில் நின்ற இராணுவம் மற்றும் பொலிசார் மீதும் விசாரணைகளை மேற்கொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சனாதிபதித் தேர்தலுக்கு முன் பொதுத் தேர்தல்; சந்திரிகா குமாரதுங்க தீவிர பரிசீலனை

### பாராளுமன்றைக் கலைத்துவிடத் தீர்மானம்

அடுத்த சனாதிபதித் தேர்தல் எப்போது என்பது பற்றி உயர்நீதிமன்றம் தெரிவிக்கும் கருத்தானது சனாதிபதிக்கு சாதகமாக அமையாதவிடத்து அவர் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடத் தீர்மானித்திருப்பதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த சனாதிபதித் தேர்தல் இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் நடத்தப்பட வேண்டும் எனத் தேர்தல் ஆணையாளர் இம்மாதம் 22 ஆம் திகதி அறிவிக்கத் தயாராவதாக தெரிய வந்ததையடுத்து அவ்வாறான அறிவிப்பு வெளியாவதற்கு முன்னதாக உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறிய சனாதிபதி தீர்மானித்திருந்தார்.

அதன் மூலம் தனக்குச் சாதகமான பதில் கிடைத்தால் அது தேர்தல் ஆணையாளரின்

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ உணவுச்சட்டத்தை மீறுவோரை பிடி கட்டளையின்றிப் பிடிக்க முடியும்!

*-தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர்-*

தமிழீழ உணவுச் சட்டத்தை மீறி தவறிழைக்கும் ஒருவரை தமிழீழசுகாதார சேவைகள் நியமிக்கும் அலுவலர் பிடி கட்டளையின்றி பிடிக்க முடியுமென தமிழீழ நீதிநிர்வாகத்துறை பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ சுகாதார சேவைகளின் பொறுப்பாளர்கள், மாவட்டப் பிரதேச இணைப்பாளர்களுக்கான தமிழீழ உணவுச்சட்டமும், நீதித்துறை நடவடிக்கைகளும் தொடர்பான கலந்துரையாட லொன்று தமிழீழ சுகாதார சேவைகள் ஒன்று கூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் தமிழீழ நீதிநிர்வாகத்துறை பொறுப்பாளர் கலந்துகொண்டு உரையாற்றுகையில்; தமிழீழ உணவுச்சட்டத்தின் இயல் மூன்றின் 13 ஆவது பிரிவின் அல்லது இதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கின்படி தவறொன்றை இழைக்கும்

(!2 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் படைக்குவிப்பு

## தமிழ் மக்கள் பேரவைக் குழுவுடன் கண்காணிப்புக்குழுத் தலைவர் பேச்சு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் பேருந்து நிலையம் அருகில் சட்டவிரோதமான முறையில் நிறுவப்பட்ட புத்தர்சிலை விவகாரத்தை அடுத்து நகரில் குவிக்கப்பட்டுள்ள படையினரை அகற்றுவது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு திருகோணமலை தலைமைப்பிரதிநிதி ஆர்தல் ரூவிட்டன், நேற்று சனிக்கிழமை காலை திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவையின் தூதுக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பேரவை தூதுக்குழுவுக்கு அதன் தலைவர் வ. விக்னேஸ்வரன் தலைமை வகித்தார். பேரவையினருடன் கடந்த வியாழக்கிழமை நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் கண்காணிப்புக்குழுவின் தலைமைப்பிரதிநிதி, திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பான கூட்டுப்படைகள் பிரிவின்

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கடை விற்பனைக்கு


கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கும்,கச்சேரிக்கும் இடையில் கிணறு, மலசலகூட வசதியுடன் கடை விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- வன்னியன் பல்பொருள் வாணிபம், கச்சேரி முன்பாக-(பிரபா), கிளிநொச்சிP.T 021 2285776 (6519)

### விற்பனைக்குண்டு

தவிடுதின்னி 497யாழ்சாலை - கிளி.மேற்படி ஸ்தாபனத்தில் வெதுப்பகமின்சாரம், கிறீம்மீற்றர் பிறசர், பாத் (ஐஸ்பழம்) கொம்பிறசர், மின்பிறப்பாக்கி TOPLAN 15 KV, குளிர் சாதனப்பெட்டி, வாட்டப்பம் என்பன விற்பனைக்குண்டு. (6524)


# இராசன் கடலுணவு வாணிபத்தினரால் மக்களுக்கு கடன் அடிப்படையில் தொழில் உபகரணங்கள் வழங்கல்





(அலுவலக செய்தியாளர்)

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு தமிழீழவைப்பகத்தின் அனுசரணையுடன் இளவேனில் நிறுவனத்தின் இராசன் கடலுணவு வாணிபத்தினர் கடன்அடிப்படையில் தொழில் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

நேற்று முற்பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சிகரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள கடலுணவு வாணிபத்தில் நிகழ்வு ஆரம்பமானது. பொதுச்சுடரை நிதித்துறை வணிக ஒன்றியத்தலைவர் சொ.வெற்றியரசன், தமிழீழவைப்பக மேலாண்மைப்பணிப்பாளர் ம.வீரத்தேவன் மற்றும் உதியவன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழதேசியக்கொடியை இளவேனில் வாணிபப் பணிப்பாளர் பூ.யாழவன் ஏற்றினார். வரவேற்புரையை வாணிப மேலாளர் சுபாகரன் நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை சொ. வெற்றியரசன், ம.வீரத்தேவன்,தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை இளவேனில் வாணிப ஆளுகை மேலாளர் வீ.குகானந்தன் நிகழ்த்தினார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு தமது பொருளாதாரத்தை முழுமையாக இழந்து நிற்கும் கடற்றொழிலாளர்களின் தொழில் திறனை அதிகரிக்கும் வகையில் இளவேனில் வாணிபத்தின் இராசன் கடலுணவு வாணிபத்தினரால் தமிழீழ வைப்பகத்தின்அனுசரணையுடன் இக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஒரு கோடி ரூபா கடன் திட்டத்தில் நேற்று 40 இலட்சம் ரூபா கடற்றொழிலில் உபகரணங்கள் வழங்கப்பட்டன இராசன்கடலுணவு வாணிபம் கடற்றொழிலாளர்களின் நலன்களைக்கருதி1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. போர் நெருக்கடியான காலகட்டங்களில் கடற்றொழிலாளர்களின் தொழில் மேம்பாட்டுக்காக இராசன் கடலுணவு வாணிபம் பல பணிகளையாற்றியுள்ளது. கடற்றொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது.

1999 ஆம் ஆண்டு தொடக்கம் இராசன் கடலுணவு வாணிபம் கடற்றொழிலாளர்களுக்கு பல கடனுதவிகளை வழங்கி வருகிறது. 2000 ஆம்ஆண்டில் மட்டும் மூன்று கோடி ரூபாவுக்கு மேலான கடனுதவிகளை கடற்றொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளது. போர் இடம்பெற்ற காலங்களில் ஐஸ்தொழிற்சாலை இன்றி பெருமளவு கடலுணவுகள் பழுதடையும் நிலையைக் கருத்தில் கொண்டு இராசன் கடலுணவு வாணிபத்தினர் முல்லைத்தீவில் ஐஸ் தொழிற்சாலையை இயக்கி வருகின்றனர்.

2004 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இராசன் கடலுணவு வாணிபத்தினரின் 11 பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் கடனாக இரண்டுகோடி ரூபா மீளப் பெறமுடியவில்லை. தற்போது கடற்றொழிலாளர்களின் தொழில் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கும் கடனுதவிகளை வழங்குவதற்கும் கிளிநொச்சியில் இராசன்கடலுணவு வாணிபத்தின் பணிமனையொன்று செயற்பட்டு வருகிறது.

இக் கடன் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும்எனவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந் நிகழ்வில் கடற்றொழிலாளர்களுக்கான இயந்திரங்களை நிதித்துறையின் மனிதவள மேம்பாட்டுப் பகுதிபணிப்பாளர் சி.அன்புச்செல்வன் வழங்கினார். மேற்படி நிகழ்வு இளவேனில் வாணிப மேலாளர் ம.உதயரூபன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கடற்றொழிலாளர்கள், நிதித்துறையினர் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,தீ)

## அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் வழமை போல் இம் மாதம் 9 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். சகல திணைக்களத்தலைவர்களும், துறைசார் பொறுப்பாளர்கள்,அரச,அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அரசஅதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார். (சோ,கு)

## தையல் பயிற்சியை முடித்த 160 பேருக்கு தையல் உபகரணமும், கடனும் வழங்கல்

(செட்டிகுளம்)

வவுனியாசெட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுகளில் தையல் பயிற்சியை கடந்த ஆண்டு முடித்துக் கொண்ட 160 பேருக்கு நேற்று வன்னி புனர்வாழ்வு அமைச்சினால் தையல் உபகரணமும். ஐயாயிரம் ரூபா சுழற்சி முறையிலான கடனும் வளங்கப்பட்டுள்ளன. வவுனியா நகரசபை மண்டபத்தில் இந் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் ரிசாட்பதியூதீன், வவுனியா பிரதேச செயலாளர்,செட்டிகுளம் பிரதேச செயலாளர், வவுனியா அரச செயலகத்தின்திட்டமிடும்பணிப்பாளர் மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (21)

## முல்லை. கடற்தொழிலாளர் கூ.ச.சமாசத்திற்கு ஈச்சிலம்பற்று கடற்தொழிலாளர் விஜயம்

(முல்லைத்தீவு)

முல்லை.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் நிர்வாகத் திறமையினைநேரில் பகிர்ந்துகொள்ள ஈச்சிலம்பற்று உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் முல்லைத்தீவுக்கு வருகை தந்து கலந்துரையாடியுள்ளனர்.

டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியில் இந்த அனுபவப் பகிர்வுச்சுற்றுலா நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் மூன்று மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கருத்துக்களை முல்லை. மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா வழங்கினார். இதில் முல்லை. மாவட்ட க.தொ.கூ.ச பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)


### 45 ஆம் நாள் நினைவு நாள்



மண்ணில்:- 20 12 1985

விண்ணில்:- 24 06 2005

பண்பின் இலக்கணமாய்
பார்போற்றும் மாணவனாய்
கல்வியிலே வேரூன்றிய
எம் சோதரனே!
காலனவன் சதியால்
கலங்கித் தவிக்கின்றோம்–உம்
அமைதிக்காய் வேண்டுகின்றோம்.

அமரர்
செல்வன் காராளசிங்கம் சஜிரேந்தன்
(உயர்தரம் 2005 வர்த்தகம்
உடையார்கட்டு மகாவித்தியாலயம்)

மாணவ நண்பர்கள்,
கிட்டிணபுரம்,கிளிநொச்சி. (6527)


## வவு.சாலம்பைக்குளத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

### -வவுனியா பிரதேசசெயலர்தெரிவிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா-சாலம்பைக்குளம் பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த மக்களை மீளகுடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் பகுதியில் உலகவங்கியின் நிதியுதவியுடன் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிரந்தர வீடுகள் பல அமைக்கப்படவிருப்பதாக வவுனியா பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

1990 ஆண்டு இடம் பெயர்ந்த மக்கள் தற்போது கிக்கிரிகொல்லாவ பகுதியில் இருக்கும் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகிறார்கள். 1990 ஆம் ஆண்டு இடம் பெயரும் போது 210 குடும்பங்கள் வாழ்ந்து வந்த போதும், தற்போது இப் பகுதியில் மீளக் குடியமர்வதற்கு 502 குடும்பங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் இராணுவ நடவடிக்கையின் போது இப் பகுதியில் புதைக்கப்பட்ட வெடிபொருட்கள் அகற்றப்பட்டு மீள் குடியமர்வு நிதியாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (21)

## பிரமந்தனாறு கிராமத்தில் பெண்கள் சங்கம நிகழ்வு

பெண்கள் சங்கமநிகழ்வு பிரமந்தனாறு கிராமத்தில் மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு பிரமந்தனாறு மகாவித்தியாலய மண்டபத்தில் மாதர் சங்கத்தலைவி புனிதவதி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மங்கல விளக்கினை பிரமந்தனாறு கிராம உத்தியோகத்தர் ச.சந்திரன் ஏற்றி வைத்தார். பொதுச்சுடரினை கிளி. மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி மற்றும் கிளி. மாவட்ட மகளிர் குழுத்தலைவி தேவாம்பிகை காசிநாதன், மாதர்சங்க செயலாளர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக்கொடியை விசுவடு பிரதேச மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கரிகாலினி ஏற்றிவைத்தார். அதனைத்தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் இடம்பெற்றது. கருத்துரைகளை கிராம சேவையாளர் சந்திரன், கிளி.மாவட்ட மகளிர் குழுத்தலைவி தேவாம்பிகை காசிநாதன், சுகாதார சேவை மேற்பார்வையாளர் ஜெயவதனி, திலீபன்மருத்துவ மனைப் பொறுப்பாளர் கார்த்திகா, விசு வமடு பிரதேச அரசியல்துறைப்பொறுப் பாளர் மு.சோழநிலவன், கிளி.மாவட்ட மகளிர்அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் கவிதை,கட்டுரை போன்றவைகள் மாதர்சங்க உறுப்பினர்களால் வழங்கப்பட்டன. (46)

## வவு.மாவட்டத்திற்கு 8மில்லியன் ரூபா ஒதுக்கீடு

வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகளுக்கு என்று இவ்வாண்டு வன்னிபுனர்வாழ்வு அமைச்சினால் எட்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசசெயலகத்தின் திட்டமிடும் பணிப்பாளர் திருமதி.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். இடம் பெயர்ந்து வவுனியா மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வருவதற்கு இந்த நிதி பயன்படுத்த இருப்பதுடன் வன்னி புனர்வாழ்வு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் ஏனையதேவைகளுக்கும் இந்த நிதி பயன்படுத்த இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (21)


## விவசாயிகள் ப.நோ.கூ.சங்க அரிசி ஆலை திறப்பு

விசுவமடு விவசாயிகள் பலநோக்குகூட்டுறவுச்சங்கம் அரிசி ஆலைஒன்றை திறந்து வைத்துள்ளது. இத்திறப்புவிழா கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. நிகழ்வில் பொதுச்சுடரினை விசுவமடு பிரதேசஅரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார்.

தமிழீழதேசியக் கொடியை கிளிநொச்சிமாவட்ட துணைஅரசியல் துறைப் பொறுப்பாளர் அருள் ஏற்றிவைத்தார். கூட்டுறவுக்கொடியை முல்லை. மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் சிவமயம் ஏற்றிவைத்தார். அரிசி ஆலையின் பெயர்ப் பலகையினை முல்லை.மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் திரைநீக்கம் செய்து வைத்தார்.அரிசி ஆலை கட்டடத்தை கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் நாடாவை வெட்டித்திறந்துவைத்தார். நிகழ்வில் கருத்துரைகளை முல்லை.மாவட்ட அரசஅதிபர் இமெல்டா சுகுமார், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தயானந்தா, பாராளுமன்றஉறுப்பினர் கனகரத்தினம்ஆகியோர் வழங்கினார்கள். (46)

# ஈராக்கில் தாக்குதல் ஓயாது

# தீவிரவாத மிரட்டலுக்கு பணியோம்



## அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ்

(டெக்சாஸ்)

**ஈராக்கில் அமெரிக்கப்படைகளின் தாக்குதல்கள் ஓயாது அல்-ஹைதா மிரட்டலுக்கு பணியமாட்டோம் என்று அமெரிக்க சனாதிபதி புஷ் கூறியுள்ளார் அமெரிக்க சனாதிபதி புஷ். நேற்று முன்தினம் கொலம்பியா அதிபருடன் கூட்டாக நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அல்-ஹைதா இயக்க துணைத்தலைவர் அய்மன் அல்-ஜாவாஹரி அமெரிக்கா மீது மீண்டும் தாக்குதல் நடத்தப் போவதாக மிரட்டியுள்ளார். அவின் பூச்சாண்டிக்குப் பயந்து நாங்கள் பின் வாங்கிவிடமாட்டோம். ஈராக்கில் மேற்கொண்ட பணியை முடித்த பின்னே அமெரிக்கப்படை நாடு திரும்பும்.

கடந்த நான்கு நாளில் அங்கு 28 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இறந்தவர்களுக்காக இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் பிரார்த்திக்கிறார்கள் என்பதை அறிந்து இறந்தவர்களின் குடும்பத்தினர் ஆறுதல் அடைவார்கள் என்று நம்புகிறேன் என அவர் கூறினார்.

# வியட்நாமை விஞ்சிய பேரழிவு ஏற்படும்

# அமெரிக்காவுக்கு அல்-ஹைதா எச்சரிக்கை

''அமெரிக்கா,இங்கிலாந்து ஆகிய நாடுகளில் மேலும் தாக்குதல்கள் நடைபெறும். வியட்நாமில் சந்தித்த பேரழிவைவிட கூடுதலாக அமெரிக்காவுக்குப்பேரழிவு ஏற்படும்'' என்று அல்-ஹைதா இயக்கத்தில் பின்லேடனின் துணைத்தளபதியாக இருக்கும் அல்ஜவா ஹிரி எச்சரித்துள்ளார்.

அல்ஜசீரா தொலைக்காட்சியில் புதிய வீடியோ காட்சியிலேயே பின்லேடனின் துணைத்தளபதி அல்ஜவாஹிரி பேசுகையில்; இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயரின் கொள்கைகள், லண்டன் குண்டு வெடிப்புச் சம்பவம் போன்ற மேலும் பல அழிவுகளை கொண்டுவரும். வியட்நாமில் சந்தித்த பயங்கரத்தை விட மோசமான, மறக்க முடியாத பயங்கரங்களை அமெரிக்கர்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு அல்ஜவாஹிரி எச்சரித்துள்ளார். தலைமறைவாக இருக்கும் அல்ஜவாஹிரியின் தலைக்கு 125 கோடி ரூபாய் விலை நிர்ணயம் செய்து அமெரிக்கா அறிவித்துள்ளது. இப்படி தொலைக்காட்சியில் மிரட்டல் விடுவதே இவருக்கு வாடிக்கையாம்.

இவரது மிரட்டல் வெளியான மறுநாள் இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயர் தீவிரவாதிகளுக்கு எதிரான புதிய திட்டத்தை அறிவிதிருக்கிறார். அதன்படி தீவிரவாதத்தைப் பரப்பும், உற்சாகப்படுத்தும் வெளிநாட்டினர் இங்கிலாந்தை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.

தேசப்பாதுகாப்புக்கு ஆபத்தாக இருப்பவர்களைத் தடைசெய்யும் வகையில் இப்போது இருக்கும் சட்டம் பலப்படுத்தப்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

# 110 கைதிகளை ஒப்படைக்க அமெரிக்கா ஆலோசனை

(வோஷிங்டன்)

கியூபாவிலுள்ள குவாண்டனாமோ சிறையில் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ள ஆப்கானைச்சேர்ந்த 110 பேரை ஆப்கான் அரசிடம் ஒப்படைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் புதிய சிறைகள் கட்டப்பட்ட பின் ஆப்கானில் பக்ராம் விமானத் தளத்திலுள்ள அமெரிக்க முகாமில் 350 ஆப்கானிஸ்தானியர்கள் ஒப்படைக்கப்படுவார்கள்.

இந்தத் தகவலை அமெரிக்க இராணுவ தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

## தீவிரவாதிகளுக்கு உதவினார் அமெரிக்கர் ஒருவர் கைது

(வோஷிங்டன்)


பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாத இயக்கமான லஷ்கர்-இ-தொய்பாவுக்கு உதவி செய்ததாக அமெரிக்காவின் மேரிலாண்ட் பகுதியைச் சேர்ந்த மகமுது பரூக் பிரெண்ட்என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

'என்வாழ்நாளில் நான் எடுத்த மிக நல்ல முடிவுகளில் பாகிஸ்தானில் பயிற்சிக்குச் சென்றதும் ஒன்று' எனப் பெருமையாகப் பேசிய மகமுது பரூக் பிரென்டை பொலிசார் கைது செய்தனர். பாகிஸ்தானுக்கும் லஷ்கர்-இதொய்பா இயக்கத்திற்கும் எவ்வித உதவியும் செய்யத்தயார். அல்லா எனது முயற்சிகளை ஆசிர்வதிப்பார் என அவர் தெரிவித்துள்ளார்.

மேரிலாண்ட் பகுதியைச் சேர்ந்த பிரெண்ட் அவரது நண்பர் தாரிக்ஷாவுடன் கைது செய்யப்பட்டார். வீட்டில் பொலிசார் சோதனை நடத்தி பாகிஸ்தானில் நடந்த தீவிரவாதிகள் பயிற்சி முகாம்களில் அவர்கள் பங்கேற்றதை உறுதிப்படுத்தினர். தாரிக்ஷாவின் தொலைபேசி குறிப்புப் புத்தகத்தில் முக்கிய தீவிரவாதிகளின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களைப் பொலிசார் கைப்பற்றினர். ஆப்கானிஸ்தான் மற்றும் ஏமனில் ஆயுத பயிற்சி உட்பட பல்வேறு பயிற்சிகள் பெற்றதை தாரிக்ஷா ஒப்புக் கொண்டுள்ளார்.



ஈராக்கில் தொடரும் வீதிக்குண்டுத்தாக்குதல்களில் பல அமெரிக்கப் படையினர் பலியாகும் நிலையில் ஹடிதாவுக்கு அண்மையில் பர் வானா பாதையில் பயணிக்கும் அமெரிக்கப் படையினர்.



ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டதன் 60 ஆவது ஆண்டு நினைவுநாளான நேற்று அஞ்சலி செலுத்தியமக்கள் வெள்ளம்.

# நான்கு நாடுகள் அமைப்பிற்குப் பின்னடைவு

# சமரசத்திட்டத்தை ஏற்க மறுத்தது ஆபிரிக்க ஒன்றியம்

(நியூயோர்க்)

ஐ.நா. பாதுகாப்பு சபையை விரிவுபடுத்தும் நான்கு நாடுகளின் தீர்மானத்துக்கு ஆபிரிக்க ஒன்றியம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதில் இந்தியா உள்ளிட்ட நான்கு நாடுகள் அமைப்பு தங்களையும், இரண்டு ஆபிரிக்க நாடுகளையும் நிரந்தர உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தன.

இந்தத் தீர்மானத்துக்கு ஆபிரிக்க ஒன்றியத்தின் ஆதரவு வேண்டும் என்பதற்காக அந்த ஒன்றியத்துடன் நான்கு நாடுகள் அமைப்பு சமரசம் செய்துகொண்டது.

பாதுகாப்பு சபையில் ஆறு நிரந்தர உறுப்பினர்களையும் மூன்று மற்றும் ஐந்து தற்காலிக உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்றும் நிரந்தர உறுப்பினர்கள் பதவியில் இரண்டு இடமும், தற்காலிக உறுப்பினர் பதவியில் இரண்டு இடமும் ஆபிரிக்காவுக்கு கொடுக்க வேண்டும் என்றும் சமரசத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

புதிய நிரந்தர உறுப்பினர்களுக்கு வீட்டோ இரத்து அதிகாரத்தை 15 ஆண்டுகளுக்குக்கோருவது இல்லை என்பதும் சமரசத்திட்டத்தின் ஒரு அம்சமாகும்.

இந்த சமரசத்திட்டத்தை ஆபிரிக்க ஒன்றியம் ஏற்க மறுத்துவிட்டது. வீட்டோ இரத்து அதிகாரத்துடன் நிரந்தர உறுப்பினர் பதவி வேண்டும் என்று ஆபிரிக்க ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

# ரஷ்ய நீர்மூழ்கி வலையில் சிக்கியது

# ஏழு கடற்படை வீரர் உயிருக்கு போராட்டம்


ஏழு வீர்களுடன் சென்ற ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் கடலுக்கு அடியில் மீன்பிடிவலையில் சிக்கிக்கொண்டதால் போதுமான பிராணவாயு ஒட்சிசன் இல்லாமல் அதிலுள்ள வீர்கள் மரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய கடற்படையை சேர்ந்த இந்த நீர்மூழ்கிக் கப்பல் ஏ.பி-28 ரகத்தைச்சேர்ந்தது. ஆழ்கடலில் மீட்புப் பணிக்காகப் பயன்படுத்தப்படும் இந்த நீர்மூழ்கிக் கப்ப்ல் 80 அடி நீளமும், 18 அடி அகலமுமுள்ளது. இது கடலுக்கு அடியில் 3250 அடி தூரம் வரைச் செல்லக்கூடியது.

அது ரஷ்யாவின் பெரியோ சோயாயா கடலில் சென்று கொண்டிருந்தபோது அடியில் விரிக்கப்பட்டிருந்த மீன்பிடிவலையில் சிக்கிக்கொண்டது. வலையிலிருந்து மீள முயற்சித்தபோது மேலும் சிக்கிக்கொண்டது.

கடல் மட்டத்திலிருந்து 620 அடி ஆழத்தில் இந்த விபரீதம் நடந்துள்ளதால் அதிலுள்ள கடற்படையினர் சுவாசிக்க 24 மணி நேரத்துக்கு தேவையான பிராணவாயுதான் (ஒக்சிசன்) அந்த நீர்மூழ்கிக் கப்பலிலுள்ளது. 24 மணி நேரத்துக்குள் அவர்கள் மீட்கப்படாவிட்டால் இறந்துவிடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ.பி- 28 நீர்மூழ்கிக் கப்பலிலுள்ள வீர்களை உயிருடன் மீட்டுத தரும்படி அமெரிக்கா, ஜப்பான் கடற்படைகளுக்கு ரஷ்யா வேண்டுகோள் விடுத்துள்ளது.




பசுபிக்கடலில் ஏழு ரஷ்ய கடற்படையினர் பிராணவாயுவின்றி தத் தளிக்கும் நிலையில் அங்கு அமெரிக்க நீர்மூழ்கிக்க ப்பலை அனுப்புவதற்கு ஆயத்தமாகும் அமெரிக்கப் படையினர்.

## பொலிசார், பொதுமக்கள் மோதல் சீனாவில் 47 பேர் கைது

(பீஜிங்)

சீனாவில் ஆயுதம் தாங்கிய கிராமவாசிகளுக்கும், 800 பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 47 பேர் கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் குவான்ஷி மாநிலத்தில் ஹெஷோப் நகரில் நடைபெற்றது.

ஹெய்ஜிங் ஆற்றில் குப்பைகளைக் கொட்டி அசுத்தப்படுத்தியதைத் தொடர்ந்தும் சட்டவிரோதமாக சுரங்கம் தோண்டி நிலக்கரி எடுத்ததாலும் கிராமமக்கள் மீது பொலிசார் நடவடிக்கை எடுத்தனர். இதனைத் தொடர்ந்து கிராமமக்கள் ஆயுதம் மற்றும் வெடி மருந்துகளுடன் கலவரத்தில் ஈடுபட்டனர். அவர்களை அடக்கப் பொலிசார் முற்பட்டபோதே மோதல் ஏற்பட்டது.

47 பேரைக் கைதுசெய்த பின் பொலிசார் ஊருக்குள் புகுந்து வீடு,வீடாகச் சோதனை நடத்தினர். அப்போது வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள், துப்பாக்கிகளைப் பொலிசார் கைப்பற்றினர்

ஹிரோஷிமாவில் அணுகுண்டுத் தாக்குதலில் பலியானவர்களுக்கான நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் ஜப்பானிய பிரதமர்.





கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சிநிலைய கட்டடத்திறப்பு விழாவினைத் தொடர்ந்து அங்கு பயிற்சியினைப்பெற்று வெளியேறும் மாணவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப ,ஆங்கில கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் கலந்துகொண்டு கண்காட்சியினைப் பார்வையிட்டு சிறப்பித்தமையினையும் மற்றும் கண்காட்சியின் பகுதிகளையும் படத்தில் காண்க. இக்கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (படம் – குகன்)

# கமக்கார அமைப்புக்களின் பலமான செயற்பாடு உற்பத்தியாளர்களின் நெருக்கடிகளைத் தீர்க்கும்

## -உட்கட்டுமானப்பகுதி பொறுப்பாளர் கலைவாணன்

(விசுவமடு)

"உற்பத்தியாளர்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றார்கள். இதற்கு கமக்கார அமைப்புக்களின் செயற்பாடுகள் பலமாக இருப்ப தனூடாக தீர்வுகாணமுடியும்" என த.பொ.மே.நிறுவன உட்கட்டுமானப் பகுதிப் பொறுப்பாளர் கலைவாணன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாண்டியன்குளம் பிரதேசத்தில் செல்வபுரம் கிராம கமக்கார அமைப்பு நிர்வாகிகள் விவசாயிகள் சந்திப்பு கடந்த புதன்கிழமை முற்பகல் பத்து மணிக்கு செல்வபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பாண்டியன் குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் த.பொ.மே. நிறுவன உட்கட்டுமானப்பகுதிப் பொறுப்பாளர் கலைவாணன், த.பொ.மே.நிறுவன நடுவப்பணியக திட்டமிடல் அலுவலர் கி.ஆறுமுகம், த.பொ.மே.நிறுவன முல்லை. மாவட்ட இணைப்பாளர் வே.தயாபரன், பாண்டியன்குள பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உற்பத்தியாளர்கள் தற்போதைய சூழ்நிலையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டது. இந்நிகழ்வில் கருத்துரை வழங்கிய கலைவாணன் தெரிவிக்கையில்;

உற்பத்தியாளர்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றார்கள். குறிப்பாகத் தற்போது நெல் சந்தைப்படுத்தலில் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருவது தெரிகிறது. இதற்கான தீர்வொன்றை அனைவரும் ஒன்றிணைந்து காணவேண்டும். இதற்கு கமக்கார அமைப்பு பலமாக இருக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

கமக்கார அமைப்பினரின் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக கி.ஆறுமுகம் கருத்துத்தெரிவிக்கையில்;

தற்போது கமக்கார அமைப்புக்களைப் புனரமைப்புச்செய்து தெரிவு செய்து அவர்கள் மூலம் கமக்கார அமைப்புக்கள் சார்ந்த நடவடிக்கைகளைப் பலப்படுத்தி வருகின்றோம். இந்த வகையில் செல்வபுரம் கமக்கார அமைப்பு புனரமைப்பு மேற்கொண்டு இவர்களின் நடவடிக்கைகளை மேம்படுத்த இருப்பதாகக் கூறினார்.

இதனையடுத்து நடப்பாண்டு கமக்கார அமைப்பு புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. தலைவராக ஆ.சந்திரகாந்தன், செயலாளராக மு.இராசேந்திரம், பொருளாளராக எஸ்.செந்தூரன் உட்பட ஏழு நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பெருமளவு விவசாயிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (46)

# வீரமுரசு எழுச்சி நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், வீரமுரசு நிகழ்வும் ஸ்கந்தபுரம் 2ஆம் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி மாலை ஐந்து மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அக்கராயன் பிரதேச அரசியல்துறை மற்றும் எழுச்சிப் பிரகடனக்குழு, எழுச்சிப் பேரவையினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

# வருமான அதிகரிப்புத்திட்டத்தின் கீழ் தருமபுரத்தில் பயனாளிகளுக்கு உதவி

(விசுவமடு)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தருமபுரம் கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த 75 குடும்பங்களுக்கு வருமான அதிகரிப்புத்திட்டத்தின்கீழ் யூ.என்.எச்.சி.ஆர் நிறுவன நிதியுதவியுடனும், போறூட் நிறுவன அனுசரணையுடனும், த.பு.கழகத்தின் கீழ் இயங்கும் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத் தினரால் புளியம் பொக்கணைச்சந்தியில் அமைந்துள்ள கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தில் வைத்து அண்மை யில் உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன.

இதில் 75 பயனாளிகளுக்கு வீடுவேய்வதற்காக தலா 200 மட்டை கிடுகுகள் வீதம் வழங்கப்பட்டன. மேலும் ஏழு பயனாளிகளுக்கு துவிச்சக்கரவண்டிகளும், பத்து பயனாளிகளுக்கு பத்துக்கோழிகள் வீதமும், பத்துப்பயனாளிகளுக்கு தலா ஒரு ஆடுவீதமும், பத்து பயனாளிகளுக்கு ஒரு பசுமாடு வீதமும் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் த.பு.க.கண்டாவளைப் பிரதேச உதவிப் பணிப்பாளர் நா.கீதன், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன தலைவர் சண்முகவேலாயுதம், கரைச்சி வடக்கு நிறுவன இணைப்பாளர் து.மகேந்திரராசா ஆகியோரும், யூ.என்.எச்.சி.ஆர் நிறுவன பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (46)

# கிளிநொச்சியில் சேவையாற்ற இரு மருத்துவர்கள் வருகை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமைபுரிவதற்கென இரண்டு வைத்தியஅதிகாரிகள் வருகை தந்துள்ளதுடன் கடந்த திங்கட்கிழமை முதல் கடமையில் இணைந்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமைபுரிந்து வந்த வைத்திய கலாநிதி வி. சண்முகராசா, கொழும்பு வடக்கு றாகம வைத்தியசாலையில் கடமை புரிந்துவந்த வைத்திய கலாநிதி எஸ்.திலீபன் ஆகிய வைத்தியர்கள் இருவருமே கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரிவதற்கென அந்தந்த வைத்தியசாலைகளிலிருந்து மாற்றம் பெற்றுவந்துள்ளனர்.

வைத்தியத்துறையில் பட்டம் பெற்றதும் சகல வசதிகளும் அடங்கிய வைத்தியசாலைகளைத் தேடி வைத்தியர்கள் செல்லும்பொழுது வசதிகள் நிறைந்த வைத்தியசாலைகளிலிருந்து தங்களது சுயவிருப்பில் கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலையில் கடமைபுரிய மேற்படி இரு வைத்தியர்களும் முன்வந்துள்ளமையினை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி முதல் சகலரும் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## பாதுகாப்பு அதிகரிப்பு !

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸ் பாதுகாப்பு நேற்று முன்தினம் வழமையிலும் பார்க்க அதிகளவில் இருந்தன.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பதற்றத்தை அடுத்தே மட்டக்களப்பில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# பரந்தன்–முல்லை வீதியில் வேகமாக வாகனம் செலுத்துவோர் மீது நடவடிக்கை

(விசுவமடு)

தமிழீழ காவல்துறையினர் பரந்தன்-முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் வேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இதில் வீதிப் போக்குவரத்து கண்காணிப்பு காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

வாகன ஓட்டிகள் வீதி அறிவுறுத்தல்களுக்கமைய வேகக்கட்டுப்பாட்டு சமிக்ஞையை மீறி வாகனங்களை செலுத்துவதால் பல வீதி விபத்துக்கள் இடம்பெற்று வந்துள்ளன.


தற்போது அடிக்கடி காவல்துறையினர் வீதியோரங்களில் நின்று வேகக் கட்டுப்பாட்டுக் கருவிமூலம் வேகத்தைக் கணித்து வேகக்கட்டுப் பாட்டை மீறி வாகனங்களைச் செலுத்துவோர் மீது அந்த இடத்தில் வைத்து குற்றப்பணம் அறவீடு செய்வதால் வீதியில் வேகமாக வாகனங்கள் செலுத்துவது குறைந்துள்ளது. இதனால் வீதி விபத்துக்களும் குறைந்துள்ளன.

தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்து வேகக்கட்டுப்பாட்டு பிரிவினரின் இந்த நடவடிக்கையை மக்கள் பாராட்டியுள்ளதுடன் இந்நடவடிக்கை தொடரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (46)

# துவிச்சக்கர வண்டிகள் மாணவர்களுக்கு வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரால் மாங்குளம் மேழிவனம் கிராம மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. மேற்படி கிராமத்தில் நடைபெற்ற இத்துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வானது மாங்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. நாகமைந்தன் தலைமையில் நடைபெற்றது. மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் ஈழவன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினம், முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.



தொடர்ந்து துவிச்சக்கரவண்டிகளை பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் மாணவர்களிடம் கையளித்தார். (கு)



விசுவமடு அரசியல்துறையின் ஆதரவில் விசுவமடு புலிகளின்குரல் வானொலிமன்றம் கடந்த 28ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு நடாத்திய முத்தமிழ் கலையரங்க நிகழ்வில் இடம்பெற்ற கலைநிகழ்வில் ஒரு காட்சியையும், புலிகளின்குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் வரவேற்பு நடனம் வழங்கிய ஆ.சுதர்சிகாவுக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காண்க. (படம் – வதனன்)

# தொழிலாளி மீதான இராணுவத்தின் தாக்குதல் அப்பட்டமான போர்நிறுத்த மீறலாகும்

## -பா.உறுப்பினர் கஜேந்திரன் கண்டனம்

**இணுவில் பகுதியிலுள்ள சிகையலங்கரிப்பு நிலையத்தின் மீது சிங்களப்படைச்சிப்பாய் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தொழிலாளர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றுமொரு தொழிலாளி காயமடைந்த சம்பவம் அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என்பதுடன் மனித உரிமை மீறலுமாகும். இதை வன்மையாகக்கண்டிக்கிறேன் எனப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் இச்சம்பவம் குறித்து வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் சம்பவத்தினை அறிந்து அவ்விடத்திற்கு வந்த பொலிசார் பொதுமக்கள் முன்னிலையில் சம்பவம் நடைபெற்ற இடத்தில் காணப்பட்ட வெடிக்காத சில ரவைகள். வெடித்தரவையின் கவர்கள் உள்ளிட்ட தடயங்களை அப்புறப்படுத்த முயன்ற போது பொதுமக்களுக்கும், பொலிசாருக்குமிடையில் மோதல் உண்டானது. ஆயுதப்படைத்தரப்பின் தவறுகளை மறைக்கப் பொலிசார் முயன்றுள்ளனர். நீதிபதி ஒருவர் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு தடயங்களைப் பதிவுசெய்யும்வரை தடயங்களை அகற்றக்கூடாது எனக் கோரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிசார் கண்ணீர் புகைக்குண்டுகளைப் பிரயோகித்து குண்டாந் தடியடிப்பிரயோகமும் மேற்கொண்டுள்ளனர். அதுமட்டுமன்றி பொதுமக்களின் ஈருருளிகளையும், உந்துருளிகளையும் சேதப்படுத்தியுள்ளனர்.

கடந்தகாலங்களில் சமாதான உடன்படிக்கையின் பின்னர் பல சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் சிங்கள ஆயுதப்படைகளால் தாக்கப்படுவதும், படைவாகனங்களினால் மோதிக்கொல்லப்படுவதும், காயப்படுத்தப்படுவதும்இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் மிரட்டப்படுவதும் அவற்றுக்கெதிராக அவ்வப்போது பொதுமக்கள் எதிர்ப்புப்போராட்டங்களை நடாத்துவதும் அப்போது சிறிலங்கா காவல்துறையினர் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குற்றவாளி கண்டுபிடித்து நீதிமன்று முன்நிறுத்தி தண்டிப்போம் என்று வாக்குறுதிகள் வழங்குவதும் பாதிக்கப்பட்ட மக்கள் நீதிகிடைக்காது ஏமாற்றப்படுவதும் தொடர்கதையாகவே உள்ளது. இந்நிலையில் சிறிலங்காவின் நீதித்துறைமீதும், நீதிமன்றங்கள் மீதும் சிறிலங்காவின் சட்டங்கள் மீதும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிசார் மீதும் பொதுமக்கள் நம்பிக்கை இழந்த நிலையில் பொது மக்கள் சட்டத்தினைக் கையில் எடுத்து தாமே தண்டனை வழங்கும் நிலை உருவாகியுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்ன மதித்து ஆயுதப்படைகள் மக்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேறியிருந்தால் நேற்று முன்தினம் இத்துயரச்சம்பவம் நிச்சயமாக நிகழ்ந்திருக்காது.

ஆயுதப்படையினர் பொதுமக்களின் எதிர்ப்புக்கு அஞ்சி ஊடரங்குச் சட்டத்தினை அமுல்படுத்தியதால் குடாநாட்டு மக்களின் இயல்புவாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டு விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும், ஏனைய வர்த்தகர்களுக்கும் பல இலட்சம்ரூபா நட்டம் ஏற் பட்டுள்ளது. ஊடரங்குச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தாது சிறிலங்கா ஆயுதப்படைகள் முகாமுக்குள் முடங்கி இருந்திருந்தாலே ஏற்படக்கூடிய எல்லா விபரீதங்களையும் தவிர்த்து பொதுமக்களின் இயல்பு வாழ்விலும் குந்தகம் ஏற்படுத் தப்படாமல் இருந்திருக்கும்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். பொதுமக்களின் உணர்வுகளுக்கும், போர் நிறுத்த உடன்படிக்கைக்கும் மதிப்பளித்து சிறிலங்கா ஆயுதப்படைகள் மக்கள் குடியிருப்புக்களில் இருந்து உடனடியாக வெளியேறுவதற்கும் மக்கள் வாழ்விடங்கள், பொது இடங்களில் ஆயுதங்களுடனோ, ஆயுதங்கள் இன்றியோ நடமாடுவதனைத் தடுப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவே எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருப்பதனை உறுதிப்படுத்த ஒரேவழி. அதைவிடுத்து பொது மக்களைப் பழிவாங்கும் நோக்கில் அப்பாவிப்பொதுமக்களைக் கைது செய்து பொய்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி சித்திரவதை செய்து சிறை வைக்க முயன்றால் அதன் விளைவுகள் பாரதூரமானதாக அமையும்.

கடந்த வியாழன் கொல்லப்பட்ட இரண்டு உயிர்களினதும் கொலைக்கு சிறிலங்காப் படையினரே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கால்நடை அபிவிருத்தி குறித்து யாழ். கால்நடை வளர்ப்போர் கூ.ச ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சமாசத்தின் விசேட கூட்டம் நேற்றுக் காலை பத்து மணியளவில் திருநெல்வேலி சந்தியிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன்த்தின் மாவட்டச் செயலகத்தில் செயலாளர் சத்தியநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்.குடாநாட்டில் நலிந்துபோயுள்ள கால்நடை உற்பத்தி, நவீனமுறை சினைப்படுத்தல், கறவை இனமாடுகள் வளர்த்தல், பால் உற்பத்திபெருக்கி பதப்படுத்தல் மூலம் உணவு உற்பத்தியை ஊக்கப்படுத்தும். மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இத்திட்டங்களை கிராமமட்டத்தில் மேம்படுத்தி நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. இக்கூட்டத்தில் சமாசத்தின் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர். (28)

# பொலிசாரின் செயல்குறித்து யாழ்.வர்த்தகர்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்படாத நிலையில் வியாபார நிறுவனங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட் டிருந்த கடைகளை, ஆயுதங்களுடன் வந்து பொலிசார் வற்புறுத்தி பூட்டிய செயலானது, பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தி இருப்பதுடன், வன்முறையை இப்பிரதேசத்தில் ஏற்படுத்தவும் பதட்டமான ஒரு சூழலை உருவாக்கவும், பொலிசார் திட்டமிட்டு இருப்பதை காட்டுவதாகவும் வணிகர்கள் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

யாழ்நகரப்பகுதி மற்றும் வலிகாமம் பிரதேசத்தில் மட்டுமே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதாக இலங்கை வானொலியில் அறிவித்துவிட்டு, அமைதியான முறையில் வியாபார நடவடிக்கைளில் ஈடுபட்ட வர்த்தகர்களை ஆயுதமுனையில் பொலிசார் அச்சுறுத்தியமை மிகுந்த கண்டனத்திற்குரியது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# நாவற்குழி 300 வீட்டுத்திட்ட வீடுகளை இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்குக!

## - 300 வீட்டுத்திட்ட அபி. குழு கோரிக்கை

நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடுகளை இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்கு நிரந்தரமாக வழங்குவதற்கு யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாவற்குழி 300 வீட்டுத்திட்ட அபிவிருத்திகுழு கோரிக்கை விடுத்துள்ளது. கடந்தகால போரினால் சிதைந்து போயுள்ள கட்டடங்களிலேயே இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் வீடுகளற்ற ஏழைகள் தங்கியுள்ளதாகவும் கடந்த மூன்றரை வருடங்களாக தங்கியுள்ள இம்மக்களுக்கே இந்த வீடுகளை வழங்கி புனரமைப்புக்களை மேற்கொள்ள யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேணடும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (28)

# மண்கும்பானில் மண் அகழ்வை நிறுத்த அபிவிருத்தி குழுக்கள் கோரிக்கை

(மண்கும்பான்)

வேலணை-மண்கும்பான் பகுதியில் கடலுக்கு அண்மித்த பகுதிகளில் வேலணைப்பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் இடம்பெற்றுவரும் மண் அகழ்வை உடனடியாக நிறுத்த வேண்டும் என மண்கும்பான் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடல்நீர் தடுப்பு அணைகள் அமைக்க வேண்டிய பகுதிகளில் இருந்து மண் அகழ்வை மேற்கொள்ள அனுமதியளித்த வேலணை உதவி அரசாங்க அதிபர் உடனடியாக இந்த நடவடிக்கைகளை கைவிட்டு மண் அள்ளுவதற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கிய அனுமதியை இரத்துச்செய்து மண் அள்ளுவதற்கு ஏற்ற ஒரு இடத்தை வழங்கும்படி பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (28)

# வடமராட்சி மக்களின் இயல்பு நிலை பொலிசாரின் நடவடிக்கைகளால் பாதிப்பு!

(வடமராட்சி)

இணுவிலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் வடமராட்சிப் பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லையாயினும் இப் பிரதேசத்தின் இயல்பு நிலை முற்றாகப்பாதிக்கப்பட்டிருந்தது.

காலை பருத்தித்துறையிலிருந்து சென்ற வடபிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்துகளும், தனியார் சிற்றூர்திச்சங்க பேருந்துகளும் ஓரிரு சேவைகளுடன் இடைநிறுத்திக் கொண்டமையால் காலை 7.00 மணிக்குப்பின் வடமராட்சிக்கும் ஏனைய பிரதேசங்களுக்குமான தொடர்புகள் முற்றாகத் தடைப்பட்டன. பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பேருந்துகள் நெல்லியடி நகரப்பகுதியில் வைத்துப் பொலிசாரால் திருப்பியனுப்பப்பட்டன. முகமாலைக்கான சேவையும் கொடிகாமத்தில்வைத்து திருப்பியனுப்பப்பட்டதால் 7.00 மணிக்குப்பின் எவ்வித போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறாது முடங்கிக் கொண்டன.

அத்துடன் வடமராட்சிப் பிரதேச பாடசாலைகளும் ஆரம்பமாகி சொற்ப நேரத்துடன் மூடப்பட்டு மாணவர்கள் வெளியேறியமையையும் காணக்கூடியதாக இருந்ததுடன், நெல்லியடி நகரத்தில் சந்தைகள், கடைகள் அனைத்தும் பொலிசாரின் பணிப்பின் பேரில் மூடப்பட்டு நெல்லியடிநகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

பிற்பகல் 2.00 மணியளவில் ஜீப்களில் வந்த பொலிசார் மந்திகை, நெல்லியடி, பருத்தித்துறைப்பகுதிகளில் பொதுமக்களை வீடுகளுக்குச் செல்லுமாறு விரட்டியடித்ததோடு வர்த்தக நிலையங்களை மூடுமாறும் பணித்தமையால் பிற்பகல் 2.00 மணிக்குப்பின் அப்பிரதேசங்களில் மக்கள் நடமாட்டங்கள் குறைந்து காணப்பட்டன.

வடமராட்சிப் பிரதேச சிகை அலங்கரிப்பு நிலையங்களில் இணுவிலில் உயிரிழந்த இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. (கா)

# இணுக்கு புல்லுக்கு வைத்த தீ இரு வீடுகளை அழித்தது!

## - மயில்வாகனபுரம் பகுதியில் சம்பவம்

(விசுவமடு)

மயில்வாகனபுரம் பகுதியில் இரண்டு வீடுகள், முற்றாக தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளன. கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள மயில்வாகனபுரம் கிராமத்தில் திருமதி எஸ். லீலா, சி. சிவகுமார் ஆகிய இருவருடைய வீடுகளும் கடந்த வெள்ளியன்று பி.ப. 2.30 மணிக்கு இப்பகுதியில் உள்ள இணுக்கு புல்லுக்கு யாரோ தீமூட்டி வைத்ததனால் அதன்மூலம் பரவிய தீ இந்த வீடுகளையும், உடமைகளையும் எரித்து நாசமாக்கியுள்ளது.

அந்த நேரத்தில் வீட்டில் எவரும் இல்லாத காரணத்தினால் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை. மண்வீட்டின் சுவர்கள் மட்டும் எஞ்சியுள்ளது.

வீடுகள் தீக்கிரையானதை அறிந்த த.பு.க நிறுவனத்தின் கீழ் இயங்கும் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி தேவைகளுக்கான உலர் உணவுப் பொருட்கள் பாய், உடுபிடவைகள் வழங்கியுள்ளனர்.

வீடுகள் தீப்பற்றி எரிந்ததை த.பு.க நிறுவன கண்டாவளை பிரதேச உதவி பணிப்பாளர் நா. கீதன் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன தலைவர் சண்முகவேலாயுதம் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு உதவிப் பொருட்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (46)

# காரைநகரில் பனைமரங்கள் கடற்படையினரால் தறிப்பு

## -சூழல் பாதுகாப்பு அமைப்பு கண்டனம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் மக்களின் காணிகளில் பரவலாக பெருமளவான பனைமரங்களைத் தறிக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா கடற்படையினர் ஈடுபட்டு வருவதாக சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

கடற்படையினரின் தமது முன்னரங்க நிலைகளை இப்பிரதேசத்தில் பலப்படுத்திவருவதுடன் புதிய அரண்களை அமைத்து வருகின்றனர். இவற்றுக்காக பெருமளவான பனைமரங்களை படையினர் தறித்துவருகின்றனர். இதனால் இப்பிரதேசத்தில் எஞ்சியுள்ள எமது வளங்களும் பறிபோகும். சூழல் உருவாகி இருப்பதுடன் எமது சுற்றுச்சூழலும் பாதிக்கப்பட்டு வருகின்றது. அந்நிய படைகள் செய்துவரும் இத்தகைய அராஜகங்களை வன்மையாகக் கண்டிப்பதாகவும் சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (28)

## கண்டெடுப்பு

முல்லைத்தீவுவீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் வே.சிவனடியார் என்பவரது நடுத்தர பிரயாணப்பை கண்டெடுக்கப்பட்டு பளைக்காவல்பணிமனையிலுள்ளது. இவரைப்பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## வருடாந்த ஆடிப்பூர விழா

(வட்டக்கச்சி)

மாயவனூர் திருக்குழல் நன்மாதுமை சமேதகணபதீஸ்வர சிவன் திருக்கோயிலின் வருடாந்த ஆடிப்பூர விழா இன்று இடம்பெறவுள்ளது. பகல் 12.00 மணிக்கு கும்பபூஜையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூஜை நடைபெற்று திருஊஞ்சல் வைபவமும் நடைபெறும். (12)

# சனாதிபதித் தேர்தல் எப்பொழுது?

# பட்டிமன்ற நடுவர் உயர் நீதிமன்றமா? தேர்தல் திணைக்களமா?

சிறிலங்காவில சனாதிபதித்தேர்தல் எப்போது என்ற கேள்விக்கு விடையளிப்பது யார்? என்ற விடயம் இப்பொழுது சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது. தற்போதைய சனாதிபதியும், அவரது கட்சியும் இதனை உயர் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டுமென விரும்புவதுடன் உயர் நீதிமன்றத்தின் தலையீட்டை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர்.



தேர்தல் ஆணையாளர்

அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதித்தேர்தல் நடைபெறுவது எப்போது என்பது குறித்து உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளார். இதனடிப்படையில் தேர்தல் எப்போது என்பதை தீர்மானிப்பதை ஒத்தி வைத்திருப்பதாகத் தேர்தல் ஆணையாளர் கூறி யிருக்கிறார்.

இதேவேளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ இதற்கு உயர் நீதிமன்றத்திடம் எதுவும் கேட்கவேண்டிய அவசியமில்லை. தேர்தல் திகதியைத் தேர்தல் ஆணையாளர்தான் முடிவு செய்யவேண்டும் எனக் கோரியிருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவும் சனாதிபதித்தேர்தல் எப்போது? என்பதை தேர்தல்திணைக்களம் அறிவிக்க வேண்டும் எனக் கோரியிருக்கிறார்.

ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்து எந்தவிவகாரமானாலும் அதன் தீர்ப்பு உயர்நீதிமன்றத்தின் கையில் செல்வதை விரும்பவில்லை போலத்தெரிகிறது. கடந்தமாதம் ஐ.தே.க நடத்திய மக்கள் சக்திப்பேரணியின் இறுதியில் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்; உயர் நீதிமன்றத்தினதோ சட்டமா அதிபரினுடையதோ ஆலோசனையை தேர்தல் ஆணையாளர் பெறவேண்டிய தேவையில்லை எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பையே பெரிதும் நம்பியிருக்கிறார். அத்துடன் அவர் மூன்றாவது தடவையாக செய்து கொண்ட இரகசியப் பதவிப்பிரமாணத்துக்கு சாட்சியாக இருப்பவர் பிரதம நீதியரசராவார். இதேவேளை தேர்தல் ஆணையாளரை ஐ.தே.க. நம்பியிருக்கின்றது. சனாதிபதித்தேர்தல் குறித்த திகதியை அறிவிக்கும் பொறுப்பு அவருடையது என்பதற்கு அது பலவாதங்களை முன் வைக்கிறது.

1994 நவம்பரில் சனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா குமாரதுங்கவின் முதலாவது பதவிக் காலம் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே முடிவடைந்திருக்கவேண்டும் ஆனால் 1999இன் இறுதிப்பகுதியை அண்மித்த வேளையில் இருந்த யுத்த நிலைமையைக் கருத்தில்கொண்டு தாமதித்தால் தனது அரசியல் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து தேர்தலில் வெற்றி பெறாமல் போகலாம் என்ற அச்சத்தில் 1999 டிசம்பரில் சனாதிபதித்தேர்தலை நடத்தினார்.

இலங்கையின் அரசியலமைப்பின்படி பதவியிலுள்ள ஒரு சனாதிபதி, தான் பதவி வகிக்கத்தொடங்கி நான்கு வருடங்கள் முடிவடைந்த பின்னர் எந்த நேரத்திலும் அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கான பிரகடனம் ஒன்றை வெளியிட்டு சனாதிபதித்தேர்தலை நடத்தலாம். இதன்படி 1999இல் முன்கூட்டியே தேர்தலை அறிவிக்கும் அதிகாரம் சனாதிபதி சந்திரிகாவுக்கு இருந்தது.

இதன்படிதான் ஜே.ஆர். ஜெயவர்த்தன 1983 இல் பதவிக்காலம் முடிவடையஇருந்தபோதும் 1982 இல் சனாதிபதித்தேர்தலை நடத்தியது ஒரு முன்னுதாரணமாக இருந்தது.

ஆனால் சனாதிபதி இரண்டாவது தடவையாகப் பதவிப்பிரமாணம் செய்து ஆறு ஆண்டுகள் நிறைவுறுகையில் அவரது பதவிக் காலம் முடிவடைவதுடன் அவர் மீண்டும் சனாதிபதித்தேர்தலில் போட்டியிட முடியாதவராகிறார். இந்நிலையில் தேர்தல் எப்பொழுது என்பதை அறிவிக்கும் அதிகாரம் அவருக்கு இல்லையெனவும்அப்போது அந்த அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கே செல்கின்றதென்றும் தெரிவிக்கப்படுகிறது.



தேர்தல் திணைக்களம்

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா வெளிப்படையாக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட 1999 டிசம்பர் 23 ஆம்திகதியை எடுத்துக்கொண்டால், அவரது பதவிக்காலம் 2005 டிசம்பர் 22ஆம் திகதியுடன் முடிவுறுகிறது.

இதன்படி அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கும் இரண்டு மாதங்க ளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்படவேண்டும். அவ்வாறாயின் ஒக்ரோபர் 22ஆம் திகதிக்குப்பின்னரும் நவம்பர் 22ஆம் திகதிக்கு முன்னரும் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இதேவேளை தேர்தல் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யப்பட்டு நான்கு வாரங்கள் முதல் ஆறு வாரங்கள் வரையிலான கால அவகாசம் வழங்கப்பட்டே தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனவே தேர்தல் நடத்தக்கூடிய மிகப்பிந்திய நவம்பர் 21 ஆம் திகதி தேர்தல் நடத்துவதாயினும் நியமனப்பத்திரம் தாக்கல் செய்வது மிகக்குறைந்த நான்கு வாரகால அவகாசம் வழங்கி தேர்தல் நடத்துவதாயினும் ஒக்ரோபர் 24 ஆம் திகதிக்கு முன் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவேண்டும்.

மேலும் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கு முன பதின்நான்கு முதல் 21 தினங்களுக்கு முன் தேர்தல அறிவிக்கப்பட வேண்டும். இவ்வகையில் 14 தினங்கள் காலஅவகாசத்தில் தேர்குறித்து அறிவிப்புச்செய்வதாயின் ஒக்ரோபர் பத்தாம் திகதிக்கு முன் சனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிக்கவேண்டும்.

எனவே தேர்தல் குறித்து முடிவு செய்து தேர்தல் திகதியை அறிவிக்க சுமார் இரண்டு மாதங்கள் மட்டுமே கால அவகாசம் உள்ளது. ஆனால் சனாதிபதி சந்திரிகா கூறுவது போல் அடுத்தவருடம் இறுதிப்பகுதியில் தான் தேர்தல் நடத்தப்படவேண்டுமானால் அது பற்றி யார் முடிவு செய்வது? என்பது தான் இப்பொழுதுள்ள கேள்வியாக இருக்கிறது.

இந்தப் பதவிக்காலத்தைத் தீர்மானிக்க இரகசிய பதவியேற்பு குறித்த வர்த்தமானி அறிவித்தல் உள்ளதா? என்பதை ஆராயப் போவதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார். அப்படியான அறிவித்தல் எதுவும் இல்லை என அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது.

ஆனால் இப்பொழுது அவ்வாறான வர்த்தமானி அறிவித்தலை இடைச்செருகலாகத் தயாரிக்க அரசாங்கம் முயற்சி செய்வதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளதுடன், இதனைத் தடுத்து நிறுத்துமாறு பொலிஸ் திணைக்களத்திடம் முறையிட்டுள்ளது.

இப்பொழுது தேர்தல் திகதியை முடிவு செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையாளரிடம் சென்றுள்ளபோதும், தேர்தல் ஆணையாளரின் தீர்ப்புக்கெதிராக உயர்நீதிமன்றத்திற்கு பாதிக்கப்படும் தரப்பு செல்ல வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதால் சர்ச்சை இதனுடன் முடிந்து விடப் போவதில்லை.

இதேவேளை இந்த ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடத்தப்படாவிட்டால் பெரும் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான ஆயத்தங்களில் ஐ.தே.க தீவிரம்காட்டி வருகிறது. இதில் ஒன்றாக, பாராளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டத்தை நிறைவேற்றவிடாது தடுக்கும் திட்டமுள்ளது.

ஆனால் அவ்வாறு நிறைவேறாதுவிடினும் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய அவசியம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு இல்லாதுவிடிலும், சிறிலங்கா ஆட்சி ஓர் அரசியலமைப்பு நெருக்கடிக்குள் சிக்கிக் கொள்ள வேண்டிய அபாயமுள்ளது. இதேவேளை ஜாதிக ஹெல உறுமய 2005 ஆம் ஆண்டில் சனாதிபதித் தேர்தல் நடத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட வேண்டுமென உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளது.



உயர் நீதிமன்றம்

இந்த மூன்று அணிகளும் அடுத்த சனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளவையாகும். இதேவேளை புதிய இடதுசாரி முன்னணியும் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது.

இதேவேளை இந்த மாத இறுதிக்குள் தனித்துப் போட்டியிடுவதா? அல்லது கூட்டணி ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதா? என்பது குறித்து முடிவு செய்யவுள்ளதாக ஜே.வி.பி கூறுகிறது. இது தமிழ்மக்கள் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி எடுக்கும் நிலைப்பாட்டைப் பொறுத்து அமையும் என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தல் திகதி குறித்த சர்ச்சையில் வெளிநாட்டவர் இதனை நிர்ணயிக்கக்கூடாது என்று மட்டுமே ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் தனித்துப் போட்டியிடுவது குறித்தோ அல்லது கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவது குறித்தோ முடிவெடுக்கப்பட்டுவிட்டால் அது இவ்வருடத்தில் தேர்தலை நடத்த வேண்டுமென்றே வலியுறுத்தக்கூடும். ஏனெனில் சந்திரிகாவை அரங்கிலிருந்து அகற்றுவதே அதன் முதல் தேவையாக இருக்கின்றது. அத்துடன் சனாதிபதித்தேர்தல் தொடர்பான கூட்டை ஏற்படுத்தினால் மகிந்த ராஜபக்ஷ விரைவில் சனாதிபதியாகப் பதவியேற்றாலே ஜே.வி.பி தனது விருப்பங்களை நிறைவேற்றிவைக்க முடியும்.

சிறிலங்காவிலுள்ள கட்சிகளுக்கோ, வேறெந்த நிர்வாக அமைப்புகளுக்கோ, அல்லது அவற்றின் பொறுப்பில் இருப்பவர்களுக்கோ சிறிலங்காவின் அரசியலமைப்பை நேர்மையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற கவலையிருப்பதாகத் தெரியவில்லை. இன்று அதியுயர் பதவியிலிருக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியலமைப்புக்கு உட்பட்டே மூன்றாவது தடவையாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டதாக முழுமையாக நம்புவாராயின் அதனை இரகசியமாக செய்து கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

அதேபோலவே அரசியலமைப்பானது இவ்விவகாரத்தில் மட்டுமல்ல எந்த விடயத்திலும் தெளிவானதாக ஆக்கப்பட்டிருப்பின் அதில் சர்ச்சைகள் இழுபறிகள் ஏற்பட இடமில்லை.

இந்த அரசியலமைப்பின் தந்தையான ஜே.ஆர். ஜெயவர்த்தன இதனை மிகவும் சிக்கல் நிறைந்ததாக, அதேவேளை சனாதிபதி பதவியை அதிகாரமிக்கதாக அமைத்தமைக்கு அவருக்கிருந்த அதிகார வெறியும், அச்சமும் காரணமாக இருந்தது என்றே கூறவேண்டும்.

அதாவது தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக இருக்கும் வரை பூரண அதிகாரத்தைக் கொண்டவராக விளங்கவும், அதேவேளை பதவி பறிபோனதும் அந்த அதிகாரமே தனக்கு அச்சுறுத்தலாகிவிடுமோ என்ற அச்சமுமே இதனை இவ்வாறு உருவாக்கத் தூண்டியது. அது சனநாயகம் என்ற பெயரில் பல கேலிக்கூத்துகள் நடைபெறக் காரணமாயிற்று.

இந்த அரசியலமைப்பை உருவாக்கியவர் எனக் கருதப்பட்ட பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் தான் இதில் காணப்பட்ட முரண்பாடுகளை நீக்க மட்டுமே முயன்றதாகத் தெரிவித்துள்ளதோடு இந்த அரசியலமைப்பின் ஒவ்வொரு சரத்தும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக ஒன்றையொன்று மறுத்துரைப்பவையாக இருந்தன. அவற்றை இயன்றளவு சீர்செய்ய முயன்றேன் என்றார்.



பிரதம நீதியரசர்

இவ் அரசியலமைப்பானது மக்களுக்கு ஒருகையால் கொடுத்த உரிமைகளை மறுகையால் பறிப்பதாக அமைந்துள்ளதாகப் பொதுவாக வல்லு னர்கள் தெரிவிக்கும் கருத்தாகும்.

எவ்வாறாயினும் இந்த அரசியலமைப்பு தனது சொந்த மக்களாகப் பாராட்டும் பௌத்த சிங்கள மக்களுக்கே -அதாவது அரசி யலமைப்பினால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றவர் களுக்கே அரசியல்வாதிகளால் இவ் வளவு தில்லு முல்லுகளையும் செய்ய இடமளிக்கிறதெனின் தமிழ் மக்களுக்கு இதன் கீழ் என்ன கிடைக்கப் போகிறது?

வேலவன்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# மேர்வின் சில்வாவைப் பதவிநீக்க வேண்டும்; சனாதிபதியிடம் தமிழ் பா.உ.கள் கோரிக்கை

## - பிரதி அமைச்சர் நீதிமன்றில் சரண்

(கொழும்பு)

**பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவை பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனக்கோரி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்கள். நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் இது தொடர்பான கருத்துக்களை குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டார்கள்.**

இந்திய வம்சாவளி மக்களை அவர் இழிவுப்படுத்தி பேசியமையானது மிகவும் கண்டிக்கத்தக்கது. எனினும் சனாதிபதி இதுவரை இது தொடர்பில் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என அவர்கள் குறை கூறினர்.

இந்த மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மகேஸ்வரன், பி. சந்திரசேகரன் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதேவேளை இலஞ்ச ஊழல் தொடர்பில் கடந்த வியாழனன்று கோட்டை நீதவானால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் பிரதிஅமைச்சர் மேர்வின் சில்வா நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இதற்கிடையில் மேர்வின் சில்வாவின் மகன் கடந்த வாரம் பொலிசார் போதைவஸ்து தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட வேளையில் அவர்களை தாக்கியமையானது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலுக்கு சமமானது எனக் கோட்டை நீதவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் குறித்த பிரதி அமைச்சரின் மகனான மாலக்கவை பொலிசார் எவ்வாறு பிணையில் செல்ல அனுமதிக்கமுடியும் என நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. எனவே இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று குறித்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# மடு தேவாலயம் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்து தருக!

## - புலிகளிடம் சிறிலங்காப் பிரதமர் கோரிக்கை

மன்னார் மடு தேவாலய திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகளில் ஒரு விசேட விருந்தினராகக் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைத் தனக்குச் செய்து தருமாறு சிறிலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக இணையத்தளச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

மடு தேவாலயம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பதனால்தான் இந்தக் கோரிக்கையை அவர் புலிகளிடம் முன்வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மடு தேவாலயத் திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் போது நாடு முழுவதிலுமிருந்து பத்து இலட்சத்துக்கும் அதிகமான கத்தோலிக்க மதத்தவர்கள் அதில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அச்சமின்றி வாழக்கூடிய சூழல் நாட்டில் உருவாகி வருகின்றது

## - சிறிலங்கா பிரதமர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பினரும் அச்சமும், சந்தேகமுமின்றி வாழக்கூடிய சூழ்நிலை உருவாகிவருவதாக நேற்றுமுன்தினம் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சிறிலங்காப் பிரதமர் அங்கு மதவழிபாடுகளில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது தெரிவித்தார்.

இந்த விஜயத்தில் பிரதமர் வேட்பாளரும், அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்கவும் இணைந்துகொண்டிருந்தார்.

முதலில் கண்டி தலதாமாளிகைக்கு விஜயம் செய்த அவர்கள் அங்கு மதவழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் இந்துக்கோவில், கிறிஸ்தவ தேவாலயம் மற்றும் பள்ளிவாசல் என்பவற்றுக்கும் சென்றுள்ளனர்.

அனைத்துத் தரப்பினருக்குமிடையில் காணப்படும் முரண்பாடுகளை நீக்கி சமாதானம் ஏற்படும் சூழ்நிலை தோன்றியிருப்பதாகவும். அனைத்துத் தரப்பினரும் தமக்கிடையில் நல்லுறவினை ஏற்படுத்தி அனைவரும் ஒன்றிணைந்து கைகளைக் கோர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அங்கு ஊடகங்களுக்கு மேலும் கூறினார்.

# ஹெலஉறுமயவின் மனு விசாரணைக்கு ஏற்பு

சனாதிபதித்தேர்தல் திகதி தொடர்பில் அறிவித்தலை விடுக்குமாறு ஜாதிக ஹெலஉறுமய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்தது.

இதன்படி எதிர்வரும் 23 ஆம் திகதி இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த மனு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டபோதே இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இதேவேளை இதற்காக பிரதம நீதியரசரின் தலைமையில் மூன்றுபேர் அடங்கிய நீதியரசர் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

# சனாதிபதித்தேர்தல் குறித்து ஆணையாளர் வெளியிடும் அறிவிப்புக்கள் சட்டவிரோதமானவை!

## - சிறிலங்கா சுதந்திரக்கட்சி கண்டனம்

(கொழும்பு)

அடுத்த சனாதிபதித்தேர்தல் காலம் தொடர்பாக காலங்களை தேர்தல் ஆணையாளர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிப்பது சிறிலங்காவின் யாப்பிற்கும், சனாதிபதித்தேர்தல் சட்டத்திற்கும் எதிரானது என சிறிலங்கா சுதந்திரக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன இந்தவிடயம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தேர்தல் ஆணையாளரின் இந்த நடவடிக்கை காரணமாக அவர் தனது நடுநிலைமைத் தன்மையில் இருந்து வழுவியுள்ளதாகவும், அவரின் பதவிக் கடப்பாட்டை மீறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கருத்து தெரிவிக்கையில்;

எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் தொடர்பான இறுதித் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கே உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் விடப்படும் பல அறிக்கைகள், தெரிவிக்கப்படும் கருத்துக்கள் எந்த வகையிலும் தேர்தல் ஆணையாளரின் கடப்பாட்டையோ அல்லது அவரது அதிகாரத்தையோ மாற்றாது எனக் குறிப்பிட்டார். (32)

# கொழும்பு மாநகர சபை உடனடியாக கலைக்கப்படாது

## - முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையை உடனடியாகக் கலைக்கும் யோசனையேதும் தமக்கு இல்லையென மேல்மாகாணசபை முதல்வர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார். கொழும்பு நகரில் குப்பை கூழங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள பார்ன்ஸ் என்ற தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட வேண்டிய 12 மில்லியன் ரூபா கொடுப்பனவு விடயத்தில் கொழும்பு மாநகரசபைக்கு ஏற்பட்ட சர்ச்சை தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் அவர் கூறினார்.

மாநகரசபையைக் கலைக்கும் உரிமை தனக்கு இருப்பதாகச் சுட்டிக்காட்டிய மேல்மாகாணசபை முதலமைச்சர், உடனடியாக மாநகரசபையைக் கலைக்கும் யோசனை தமக்கு இல்லையெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மாநகரசபையைக் கலைப்பதற்கான தேவையெதுவும் ஏற்படவில்லையென கொழும்பு மாநகரசபையின் பிரதித்தலைவர் அசாத்சாலி தெரிவித்தார்.

மாநகரசபையை முதலமைச்சர் கலைக்கமாட்டாரென நம்பிக்கை வெளியிட்டுள்ள அசாத்சாலி, இந்தப் பிரச்சினை தொடர்பாக உரிய தீர்வினை அவர் மேற்கொள்ளுவாரெனவும் கூறினார்.

# பிரதமர் மகிந்தவின் வெற்றிக்காக ஜே.வி.பி யுடன் சு.க.வினர் பேச்சு

## - அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு ஜே.வி.பி யின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அந்தக்கட்சியுடன் உத்தியோகப்பற்றற்ற வகையில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும், நீர்ப்பாசன இராஜரட்ட அபிவிருத்தி அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தமது கட்சியின் சனாதிபதி வேட்பாளர் யாரென உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிரான அனைத்து கட்சிகளுக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அழைப்பு விடுத்தது.

எதிர்வரும் நாட்களில் அனைத்துத்தரப்புடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அவர்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# ஹெல உறுமயவின் கோரிக்கை நிராகரிப்பு; சனாதிபதி வேட்பாளரை நிறுத்த முடிவு!

(கொழும்பு)

சிறிலங்காவின் அடுத்த சனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்கு சிங்கள இனவாதக் கட்சியான ஜாதிகஹெல உறுமயவும் வேட்பாளரை நியமிக்கவுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஒன்பதாம் நாள் தமது வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஏனைய கட்சிகளின் சனாதிபதி வேட்பாளர்களிடம் ஜாதிகஹெல உறுமய அதன் பஞ்சதர்மக் கொள்கை விதிகளை முன்வைத்து அந்த கொள்கைக்கு ஆதரவளிக்கும் கட்சிக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருந்தது.

எனினும் அக்கட்சியின் அந்த அறிவிப்பிற்கு எந்த ஒரு கட்சியிடம் இருந்தும் சாதகமான பதில் கிடைக்காததால் ஜாதிகஹெல உறுமய தங்கள் கட்சியின் சனாதிபதி வேட்பாளரை நியமிக்க முடிவு செய்ததாக அக்கட்சியைச் சேர்ந்த அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார். (32)

# சிபிகே – சிறிலங்கா சனாதிபதியின் உத்தியோகபூர்வ சுயசரிதையல்ல

## - சனாதிபதி செயலகம் மறுப்பு

சிபிகே எனும் பெயரில் வெளியிடப்பட்டுள்ள நூல் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தியோகபூர்வ சுயசரிதையல்ல என சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

சனாதிபதியின் உத்தியோகபூர்வ சுயசரிதை தற்போது வடிவமைக்கப்பட்டு வருவதாகவும் சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

சனாதிபதியின் ஆங்கில மொழியிலான உத்தியோகபூர்வ சுயசரிதை கடந்த 29 ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்பட்டதாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் அறிவித்திருந்தது.

இந்த சுயசரிதை கிராம் எல். வில்சன் என்பவரினால் எழுதப்பட்டுள்ளது.

பல முக்கியஸ்தர்களின் சுயசரிதைகளை தான் எழுதியுள்ளதாகவும் எனினும் சிபிகே அவற்றை விட வித்தியாசமானது என்றும் இந்த நூலின் ஆசிரியர் நூல் வெளியீட்டின்போது தெரிவித்திருந்தார்.

இந்த சுயசரிதை நூல் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் இலங்கை ஆழிப்பேரலை நிதியத்திற்கு வழங்கப்படவுள்ளது.

# எஸ்.பி.திசாநாயக்கவின் கடவுச்சீட்டு நீதிமன்றால் மனைவியிடம் கையளிப்பு

இலஞ்ச ஊழல் வழக்கின் போது பிணை வழங்குவதற்காக பறிமுதல் செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவின் கடவுச்சீட்டை அவரது மனைவியிடம் கொழும்பு மேல் நீதிமன்ற பதிவாளர் கடந்த புதன்கிழமை கையளித்துள்ளார்.

குற்றச்சாட்டு வழக்கின்போது கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி எஸ்.பி. திசாநாயக்கவிற்கு பிணை வழங்கப்பட்டது. அதற்காக அவரின் கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவரை நாட்டை விட்டு வெளியே செல்ல அனுமதிக்க வேண்டாமென குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் எஸ்.பி,திசாநாயக்க விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஜூலை மாதம் 28ஆம் நாள் மூத்த சட்டவாளர் கௌரிசங்கரி தவராசா தனது கட்சிக்காரரான எஸ்.பி. திசாநாயக்கவின் கடவுச்சீட்டை மீள ஒப்படைக்குமாறு எழுத்துமூல மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதனைத் தொடர்ந்து எஸ்.பி. திசாநாயக்கவின் கடவுச்சீட்டு அவரின் மனைவியான தமாரா திசாநாயக்கவிடம் கையளித்ததுடன் அவர் நாட்டை விட்டு வெளியே செல்ல முடியாது என்ற தடையையும் மேல் நீதிமன்றம் நீக்கியுள்ளது.

# பிந்திய திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் எதுவும் அச்சிடப்படவில்லை

## அரச அச்சகத் தலைவர் மறுப்பு

(கொழும்பு)

பிந்திய திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலொன்று அச்சிடுதல் உலகில் எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் நடந்திராதது. இனிமேலும் நடக்காத செயற்பாடு. அரச அச்சகம் அவ்வாறு பிந்திய திகதி யிட்ட வர்த்தமானி அறிவித்த லொன்றை எந்தவகையிலும் அச் சிடப்போவதில்லை என அரச அச்சகத் தலைவர் லக்ஸ்மன் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடுவதென்பது ஒருவர் மட்டும் மேற்கொள்ளும் செயற்பாடல்ல. அதற்கென ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். அரச அச்சகத்திற்குக் கிடைக்கும் ஆவணம் வர்த்தமானி அறிவிப்புப் பிரிவிற்கு அனுப்பப்பட்டு அவர்கள் அங்கு தேவையான தகவல்களைச் சேர்த்த பின்னர் அதனை திருத்துனரிடம் அனுப்ப வேண்டும்.

அந்த ஆவணத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக குறைந்த பட்சம் மூன்று அதிகாரிகளாவது பணியாற்ற வேண்டும் எனவும் குணவர்த்தன தெரிவித்தார்.

அரச அச்சகத்திலிருந்து அனுப்பப்படும் அனைத்து வர்த்தமானி அறிவித்தல்களும் ஐந்து வருட காலம் அரச அச்சகத்தின் நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கும். அதன் ஒரு பிரதி கட்டாயமாக அரச பதிவாளர் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட அரச அச்சகத்தின் இணையத் தளத்திலும் இந்த வர்த்தமானி அறிவித்தல்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டு சனாதிபதி பதவிப்பிரமாணம் செய்து கொண்டமை தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடுமாறு இதுவரை எந்தவொரு ஆவணமும் தனக்கு அனுப்பப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். சனாதிபதி 2000 ஆம் ஆண்டு பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக போலி வர்த்தமானி அறிவித்தலொன்று அச்சிடப்போவதாக கடுவெல ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் சட்டத்தரணி சுஜீவ சேரசிங்க பொரளை பொலிசாரிடம் செய்துள்ள முறைப்பாடு தொடர்பாகக் கேட்டபோதே அச்சகத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இந்த முறைப்பாட்டிற்கமைய கடந்த புதன்கிழமை பொரளை பொலிசார் அரச அச்சகத்தை சோதனையிட்டதாகவும், ஆனால் சந்தேகத்திற்கிடமான முறையில் அங்கு எந்தவொரு ஆவணமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இடைத்தங்கல் முகாம்களிலிருந்து பொலிஸ், அதிரடிப்படை விலகல்

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினர் வியாழக்கிழமை முதல் வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

இதேவேளை அக்கரைப்பற்றுப் பகுதியில் அதிகளவு படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் விசேட அதிரடிப்படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டு, சந்தேகத்திற்கு இடமானவர்களையும், வாகனங்களையும் பரிசோதிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உந்துருளிகள் உட்பட சகல வாகனங்களினதும் அனுமதிப் பத்திரங்கள் பரிசோதிக்கப்படுவதுடன், படையினரது முகாம்கள் அமைந்துள்ள பகுதியூடாக வயல் வேலைகளுக்குச் செல்பவர்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# இராணுவத்திலிருந்து தப்பியோடியோரை நீக்கும் வேலைத்திட்டம் நீடிப்பு

இராணுவச் சேவையை இடைநடுவே விட்டுச்சென்றவர்களை சட்டப்படி சேவையில் இருந்து நீக்கும் வேலைத்திட்டம் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு சனவரி 8 ஆம் திகதிவரை இராணுவச் சேவையை விட்டுச் சென்றவர்களாக அறிவிக்கப்பட்டவர்களுக்கு முறைப்படி சேவை விலகல் கடிதம் வழங்குதலே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம் ஆகுமெனக் கூறப்படுகிறது. விலகிச் சென்ற இராணுவச் சிப்பாய்களை முறைப்படி சேவை நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் குருநாகல் போயகனை, விஜயபாகு படைப்பிரிவு மத்திய நிலையத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பண்டாரநாயக்க குடும்பத்தின் சூழ்ச்சிக்குள் பிரதமர் மகிந்தராஜபக்ஷ அகப்பட்டுள்ளார்

### -ஐ.தே.க பிரதிப் பொதுச்செயலர் தெரிவிப்பு

(கொழும்பு

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாரிய சூழ்ச்சியொன்றுக்குள் அகப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. பண்டாரநாயக்க குடும்பத்தாரின் சூழ்ச்சியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரும், பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ சிக்கியிருப்பதாகவும், பிரதமரை கட்சியிலிருந்து விலக்குவதற்கும், அவருடைய அரசியல் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் பண்டாரநாயக்க குடும்பம் தீர்மானித்திருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும்போதே அவர் இந்தத் தகவலைக் கூறினார். சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடாத்தி அதில் அநுரா பண்டாரநாயக்கவை பிரதமராக்கி அதன் பின்னர் சனாதிபதித் தேர்தலை நடாத்தி அநுரா பண்டாரநாயக்கவை சனாதிபதியாக்குவதே அவர்களுடைய திட்டமெனவும், இதனால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனித்து விடப்படுவாரெனவும் திஸ்ஸ அத்தநாயக்க அங்கு சுட்டிக்காட்டியிருந்தார். எனினும், எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே சனாதிபதி வேட்பாளரெனவும், மாறாக பொதுத்தேர்தல் முதலில் நடாத்தப்பட்டால் அதில் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமர் வேட்பாளரெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி கட்டுக்கோப்பான கட்சியென அங்கு சுட்டிக்காட்டிய பிரதிப் பொதுச் செயலாளர், தமது கட்சிக் கொள்கைக்கமைய கட்சித்தலைவர் சனாதிபதியானால், பிரதித் தலைவர் தன்னிச்சையாக பிரதமராவாரெனவும் கூறினார். அத்துடன், சனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜே.வி.பி தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளியிட வேண்டுமெனவும் அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

# தண்டப் பணம் அதிகரிப்பிற்கு சாரதிகள் கடும் எதிர்ப்பு

அரசாங்கம் வாகனங்களுக்கான தண்டப்பணத்தை அதிகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சகல சாரதிகளும் தங்களின் பணிகளில் இருந்து விலகவுள்ளதாக எச்சரித்துள்ளனர். அகில இலங்கை மோட்டார் வாகன உரிமையாளர் சங்கம் மற்றும் சாரதிகளைப் பாதுகாக்கும் இயக்கம் என்பவற்றினால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதில் அரசமற்றும் தனியார்துறை சார்ந்த அனைத்து சாரதிகளும் பங்கேற்பர் என அந்த இயக்கத்தின் பொதுச் செயலர் தெரிவித்துள்ளார். (32)

# சனாதிபதித் தேர்தல் திகதி எப்போது? உயர் நீதிமன்றம் விரைவில் பதில்!

### -உயர் நீதிமன்ற பிரதிப்பதிவாளர் தகவல்

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் திகதி எப்போதெனக்கேட்டு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்கு விரைவில் பதில் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. சனாதிபதியின் இந்தக் கடிதத்துக்கு பிரதம நீதியரசர் விரைவில் பதில் அனுப்பிவைப்பாரென உயர் நீதிமன்றத்தின் பிரதிப்பதிவாளர் ஹேமா ரட்ணாயக்க தெரிவித்தார்.

இந்தக் கடிதம் தொடர்பாக பிரதம நீதியரசர் இதுவரை எந்த விதமான அறிவுறுத்தல்களும் வழங்கவில்லையெனவும், எனினும், விரைவில் இந்தக் கடிதம் தொடர்பாக பதில் வழங்கப்படுமெனவும் அவர் கூறினார்.

சனாதிபதியின் இந்தக் கடிதத்தை சனாதிபதியின் செயலாளர் டபிள்யூ. ஜே.எஸ்.கருணாரட்ண கடந்த செவ்வாய்க் கிழமை தம்மிடம் கையளித்ததாகவும் உயர் நீதிமன்றத்தின் பிரதிப்பதிவாளர் குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்பட்டால் அது பிரதமநீதியரசருக்கு அனுப்பி வைக்கப்படுமெனச் சுட்டிக்காட்டிய உயர்நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் ஹேமா ரட்ணாயக்க, அதன் பின்னர் நீதியரசரின் அறிவுறுத்தல் பதிவுப் புத்தகத்தில் பதியப்படுமெனவும் தெரிவித்தார்.

# தேர்தலை வலியுறுத்தி இரண்டாயிரம் கூட்டங்கள்!

### -ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கான திகதியை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதிக்கும், ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதிக்கும் இடைப்பட்ட தினங்களுக்குள் அறிவிக்க வேண்டுமெனவும், அவ்வாறு அறிவிக்காத பட்சத்தில், சனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரி நாடு தழுவிய ரீதியில், இரண்டாயிரம் கூட்டங்களை நடத்தப் போவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டம் தம்புள்ளையில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (32)

## பாரவூர்தி கடத்தல்

கொழும்பிலிருந்து தனமல்விலைப் பகுதிக்கு பாரஊர்தியொன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்ற மூவர் சாரதியை கீழே தள்ளிவிட்டு பாரவூர்தியைக் கடத்திச் சென்றனர்.

# இனிவரும் தேர்தல்களில் ஐ.தே.க தனித்துப் போட்டி

எதிர்வரும் தேர்தல்களில் வன்னி மாவட்டத்தில் தனித்து போட்டியிடுவது என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. வன்னிமாவட்ட கட்சியின் நிர்வாகக்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. இதுவரை காலமும் ஐக்கிய தேசியக்கட்சி வன்னி மாவட்டத்தில் சிறுபான் மைக் கட்சிகளுடன் இணைந்தே போட்டியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.(32)


solidar | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | Norwegian People's Aid

The Solidar Group-ASB (Arbeiter Samariter Bund), NPA (Norwegian People's Aid) and SAH (Swiss Labour Assistance)-is now reecruiting experienced and qualified engineers for Phase III Reconstruction activity in the tsunami affected district of Jaffna (Vadamarachchi East). Solidar is committed to building more than 1,000 Permanent homes and a range of associated community infrastructure, including fishing communities, Playgrounds, preschools, community centres, water & sanitation and road building. Based in kilinochchi, Solidar is now recruiting the following positions:

**Project Engineers**

Experienced Project Engineers are required to manage and implement housing and community construction Projects in coordination with senior Engineers and Building Site Managers. Vacancies currently exist for qualified personnel in the following areas:

* Housing Construction
* Road Construction
* Construction of Public Building
* Water & Sanitation

Successful candidates should have at least 3 years working experience, be familiar with the area of implementation, be fluent in English and Tamil and have experience with standard computer software. Women are encouraged to apply.

The positions will be based in kilinochchi.


Interested candidates should submit a CV and cover Letter by email to: stevedurrant 2003 @ yahoo.co.uk. please indicate the position you apply for in the subject line.

Alternatively, submissions may be sent by mail to:
Mr.Florian Meyer
Programme Manager Construction
ASB/SOLID AR Office
156,Jaffna Road
Paranthan, kilinochchi

Deadline for applications is August 13 th
Only short listed candidates will be contacted.

(சி.12485)

# ஜெயலலிதாவின் மனுவிற்கு இடைக்காலத் தடை
# இரு வழக்குகளும் ஒன்றாக விசாரிக்கப்பட மாட்டாது?


ஜெயலலிதாவும், சசிகலாவும்

சொத்துக்குவிப்பு வழக்கு, லண்டனில் உல்லாச விடுதி வாங்கிய வழக்கு ஆகிய இரண்டையும் ஒன்றாக்கி விசாரணை நடத்துவதற்கு உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.


வருமானத்துக்கு அதிகமாக 66 கோடியே 65 இலட்சம் ரூபாய்க்கு சொத்து சேர்த்ததாக ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலா, வி.என். சுதாகரன், இளவரசி ஆகியோர் மீது தொடரப்பட்ட சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை பல்வேறு கட்டங்களைத் தாண்டி தற்போது பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

அதேபோல லண்டனில் உல்லாசவிடுதி வாங்கியதாக ஒரு வழக்கும் இதே நீதிமன்றத்தில் நடக்கிறது. இதில் டி.டி.வி.தினகரன் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

இந்த இரு வழக்குகளும் தனித்தனியே விசாரிக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில் திடீரென்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் ஜெயலலிதா ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். சொத்துக்குவிப்பு வழக்கையும், லண்டனில் உல்லாசவிடுதி வாங்கியது தொடர்பான வழக்கையும் ஒருங்கிணைத்து ஒரே வழக்காக வைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று அந்த மனுவில் ஜெயலலிதா குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரணை செய்த பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி-மனுதாரரின் வேண்டு கோளின்படி இரு வழக்குகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கடந்த ஜூன் 27 ஆம் திகதி தீர்ப்பளித்தார். இதனைத் தொடர்ந்து இரு வழக்குகளையும் ஒன்றாக்கி விசாரணை நடந்து வருகிறது.

பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து தி.மு.க பொதுச்செயலாளர் அன்பழகன் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்தார். இதைத் தொடர்ந்து இவ்விரு வழக்குகளையும் ஒன்றாக்கி விசாரிக்கும் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஜெயலலிதா மற்றும் சகாக்கள் நான்கு பேருக்கும் விபரம் அனுப்ப உத்தர விடப்படுகிறது என்று அது அறிவித்துள்ளது.


ஐதராபாத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் சனாதிபதி அப்துல் கலாமின் வண்ண ஓவியத்தைத் தீட்டி அதை ஐதராபாத்துக்கு சென்ற அப்துல் கலாமுக்கு பரிசளித்தார். அவ்வேளை எடுத்த படம் இது.

## சித்தராமையா மற்றும் இரு மந்திரிகள் ஆளுநரால் பதவி நீக்கம்

கர்நாடக மந்திரிசபையில் இருந்து இராஜினாமா செய்ய மறுக்கும் சித்தராமையா உட்பட மூன்று மந்திரிகளை மாநில ஆளுநர் பதவி நீக்கம் செய்யவுள்ளார்.

கர்நாடக துணை முதல்வர் சித்தராமையா, மற்றும் மந்திரிகள் எச்.டி. மகாதேவப்பா, சதீஷ் ஜார்கி கொலி ஆகியோரை மந்திரி சபையில் இருந்து நீக்கக்கோரி மதசார்பற்ற ஜனதா தளம் சட்டமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றியிருந்தனர்.

இதைத் தொடர்ந்து சித்தராமையா, மற்றும் இரு மந்திரிகளை நீக்குமாறு அக்கட்சியின் மாநில தலைவர் திப்பன்னா முதல்வர் தரம் சிங்குக்கு கடிதம் எழுதியிருந்தார்.

துணை முதல்வர் பதவியை தாமாகவே இராஜினாமா செய்ய சித்தராமையா மறுத்துவிட்டார். இதனால் அவரை விலக்கிவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இது தரம்சிங்குக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. தரம்சிங் நேற்று முன்தினம் சித்தராமையாவுடன் தொலைபேசியில் பேசியதாகத் தெரிகிறது. உங்களை விலக்கிவிடும்படி எனக்கு நிர்ப்பந்தம் அதிகரித்து வருகிறது. தேவகவுடாவும் இதில் பிடிவாதமாக இருக்கிறார். எனவே நீங்களாக இராஜினாமா செய்துவிடுங்கள் என்று சித்தராமையாவிடம் தரம் சிங் கூறியதாகத் தெரிகிறது. ஆனால் இதை சித்தராமையா ஏற்க மறுத்துவிட்டார். நானாக விலகுவது இல்லை. நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சித்தராமையா கூறிவிட்டதாகத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து சித்தராமையா உட்பட மூன்று மந்திரிகளையும் மந்திரி சபையில் இருந்து நீக்குமாறு முதல்மந்திரி சிபாரிசு செய்ததைத் தொடர்ந்து சித்தராமையா மற்றும் இரு மந்திரிகளையும் மந்திரிசபையில் இருந்து ஆளுநர் பதவி நீக்கியுள்ளார்.


பெங்களூரில் நேற்று முன்தினம் சித்தராமையா ஆதரவாளர்கள் தீவைத்ததில் எரிந்து நாசமான அரச பேருந்து ஒன்றைப் படத்தில் காணலாம்.

### அர்ஜீன்சிங்கிற்கு இருதயக் கோளாறு

இந்திய மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் இருதயக்கோளாறு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன்சிங் சில காலமாக உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வருகிறார்.

அவருக்கு நேற்று முன்தினம் வழக்கமான மருத்துவப் பரிசோதனை நடந்த போது இருதயத்தில் கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.


மராட்டியத்தில் தானே மாவட்டத்தில் 40 கிராமங்கள் அடியோடு மழைவெள்ளத்தில் மூழ்கிவிட்டன. தற்போது இயல்பு நிலைமை மெல்ல மெல்ல வழமைக்குத் திரும்பி வருகிறது. சாகவன் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் நிவாரணப் பொருட்கள் அடங்கிய பொதியுடன் வீடு திரும்புவதைப் படத்தில் காணலாம்.

## பாரதியஜனதாவுடன் உறவு முறிந்ததையடுத்து அகாலிதளமுடன் கூட்டுச்சேர சந்திரபாபு நாயுடு முயற்சி

பாரதிய ஜனதாவுடனான உறவு முறிந்ததைத் தொடர்ந்து மூன்றாவது அணி ஒன்றை அமைப்பது தொடர்பாக அகாலிதளம் தலைவர் பாதலுடன் சந்திரபாபு நாயுடு இரகசிய சந்திப்பு நடத்தினார்.

கடந்த ஆட்சியின்போது மத்தியில் பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைத்து ஆட்சிக்கு வெளியில் இருந்து ஆதரவு அளித்தவர் தெலுங்கு தேச கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு. அதையடுத்து ஆந்திராவிலும் பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைத்து சட்ட சபை தேர் தலை சந்தித்து. ஆனால், கடந்த சட்டமன்ற தேர்தலில் தோல்வியை தழுவியதால் அதன்பின் பாரதிய ஜனதாவுடன் இருந்த நெருக்கத்தைத் தவிர்த்து வந்தார் சந்திரபாபு நாயுடு.

இந்த நிலையில் ஆந்திராவில் நகராட்சிகளுக்கு நடக்கும் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக பாரதிய ஜனதா கட்சி அறிவித்தது. இதன் மூலம் தெலுங்கு தேச கட்சிக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும் இடையே இருந்த கடந்த ஆறு ஆண்டு கூட்டணி முறிவடைந்தது. இதற்கு தெலுங்கு தேசம் கட்சியை பாரதிய ஜனதா கட்சி குற்றமும் சாட்டியது. இந்த குற்றச்சாட்டுக்கு பதில் அளித்த சந்திரபாபு நாயுடு எங்களுக்கும் பாரதிய ஜனதாவுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. முன்புகூட தேசிய ஜனநாயக கூட்டணியைத் தான் ஆதரித்தோம். டில்லியில் காங்கிரஸ் அல்லாத மத்திய அரசு அமைய வேண்டும் என்பதற்காகவே இந்த முடிவை எடுத் திருந்தோம் என்று கூறினார்.

இந்த நிலையில் பாரதிய ஜனதா கட்சியு டன் கூட்டணி முறிந்ததைத் தொடர்ந்து மூன்றாவது அணி அமைக்கும் முயற்சியில் சந்திரபாபு நாயுடு ஈடுபட்டுள்ளார். இவரை அகாலி தளம் தலைவரும், முன்னாள் முதல்வருமான பாதல் சந்தித்துப் பேசினார். அப்போது மூன்றாவது அணி பற்றிப் பேசப்பட்டதாக் கூறப்படுகிறது.

ஆந்திராவில் நகராட்சிகளுக்கு மட்டும் நடக்கும் முதல் கட்டத் தேர்தலில் தெலுங்கு தேச கட்சி சிறுபான்மையினர் மற்றும் ஆந்திர கம்யூனிஸ்டுகள் ஆதரவுடன் போட்டியிட முயற்சி செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

### அப்துல்கலாம் வேண்டுகோள்

உலகத்தரம் வாய்ந்த போர் விமானத்தை இந்தியா உருவாக்க வேண்டுமென்று விஞ்ஞானிகளுக்கு இந்திய சனாதிபதி அப்துல்கலாம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருநாள் பயணமாக ஐதராபாத் சென்ற சனாதிபதி அப்துல் கலாம் நேற்று முன்தினம் இமாரத் ஆய்வு மையத்தில் விஞ்ஞானிகளிடையே பேசும் போதே அவ்வாறு தெரிவித்தார்..


# பணிநிலை வேண்டுகை

கீழ் வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2005.08.13 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**பணிநிலை:**

01.ஆய அலுவலர் (ஆண்கள்)
02.ஆய உதவியாளர் (ஆண்கள்)

**கல்வித்தகைமை:**

பணிநிலை 01.க.பொ.த (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
பணிநிலை 02.க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேணடும்.

**வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:**

மேலாளர்,
ஆளணிப்பிரிவு,
நடுவப்பணியகம்,
ஆயம்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:**

2005.08.16
காலை 10.00 மணிக்கு

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:**

நடுவப்பணியகம்,
ஆயம்,
கிளிநொச்சி.

**குறிப்பு:-நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.**

(சி.12491)

**மேலாளர், ஆளணிப்பிரிவு, ஆயம்.**

–புது–மத்தியகல்லூரி பொன்விழா ஞாபகார்த்த–

# மென்பந்து இறுதிப் போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி, வித்தியா அணிகள் வெற்றி


மல்லாவி மத்தியகல்லூரி அணியினர்.


முள்ளியவளை வித்தியா அணியினர்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் விளையாட்டுப்போட்டிகளில் மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பாடசாலை மட்டத்தில் மல்லாவி மத்தியகல்லூரி அணியும், கழகங்கள் மட்டத்தில் முள்ளியவளை வித்தியா அணியும் சம்பியனாகின. முதலில் நடைபெற்ற பாடசாலை அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் வற்றாப்பளை ம.வி அணியும், மல்லாவி மத்திய கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பான ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய வற்றாப்பளை ம.வி. அணி 58 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் செல்வரூபன் ஏழு ஓட்டங்களையும், கோகிலன், ஆதவன்,தலா நான்கு ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஐங்கரன் ஆறு ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர் கிருஷ்ணகுமார், பிரசன்னா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய மல்லாவி மத்திய கல்லூரி அணி எட்டு விக்கெட்டை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் பிரசன்னா ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களைப் பெற்றார். ஜெனிபன், துளசிதாஸ் தலா எட்டு ஓட்டங்களைப்பெற்றனர். பந்துவீச்சில் செல்வரூபன் மூன்று விக்கெட்டுக்களையும், கபில், ஆதவன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவதாக நடைபெற்ற கழகங்களுக்கிடையிலான இறுதியாட்டத்தில் வித்தியா அணி, தோழர்கள் அணியை இலகுவான வெற்றி கொண்டது. முதலில் ஆடிய தோழர்கள் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவரில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 64 ஓட்டங்களைப்பெற்றது. துடுப்பாட்டத்தில் சுகந்தன் 36 ஓட்டங்களையும், சுகிர் பத்து ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யூட் நான்கு விக்கெட்டையும் , சரவணன் இரண்டு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

65 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வித்தியா அணி சரவணனின் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றியிலக்கை அடைந்தது. 12.1 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்கள் இழந்து வெற்றி இலக்கு அடையப்பட்டது. சரவணன் 30 ஓட்டங்களைப் பெற்றார். இவரைவிட சுகந்தன் 12ஓட்டங்களைப்பெற்றார். வீழ்த்தப் பட்ட விக்கெட்டை தினேஸ், சிவா ஆகியோர்கைப்பற்றினர்.

மேற்படி இரண்டு போட்டிக்கும் நடுவர்களாக குமார், சுபானந் ஆகியோர் கடமையாற்றினர். போட்டிவர்ணனையாளராக மாதவ ஜெயப் பிரகாஸ் கடமையாற்றினார். (சி)

## நியூஸ்ரார் வி.கழகம் நடாத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் தமிழீழ விளையாட்டுத்துறையின் பதிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் மாபெரும் விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்துகின்றது. அதில் மென்பந்தாட்டம் (15ஓவர்),கரப்பந்தாட்டம் (செற்றப்), கரப்பந்தாட்டம் (ஓவர்), பூப்பந்தாட்டம் (ஒற்றையர், இரட்டையர்) ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. பங்குபற்ற விரும்பும் கழகங்கள் புதுக்குடியிருப்பு நிமலன்ஸ், கிளிநொச்சி துளசிஸ்ரூடியோ, இன்னரசிக்குளிரகம் வாடியடிபூனகரி, ஆகிய இடங்களில் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளனர். ஒரு கழகத்திலிருந்து எத்தனை அணிகளும் பங்குபற்றலாம் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

## இங்கிலாந்து மண்ணில் சதம்



ஆஷஸ் கிண்ண இரண்டாவது டெஸ்டின் இரண்டாம் இன்னிங்சின் தொடக்கத்திலேயே வோர்ன் சுழல் ஜாலம் காட்டினார். இவர் வீசிய அற்புத பந்து அப்படியே ஸ்ரோஸ்மிடில் ஸ்டம்பை தகர்க்க, இங்கிலாந்து மண்ணில் 100ஆவது விக்கெட்டை பெற்றார். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட் வீழ்த்தியுள்ளவர்களின் பட்டியலில் முதல் இடத்திலுள்ள வோர்னின் சுழலில் இரண்டு இன்னிங்சிலும் ஸ்ரோஸ் போல்டானது சிறப் பம்சம்.



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் பயிற்சியின் போது பந்து வழுக்கி இவரது வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. அத்தோடு ஓய்வாக இருக்க விரும்பாமல் எட்பாஸ்டனில் நடந்து வரும் இரண்டாவது டெஸ்டை பார்வையிட வந்தார்.

## முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறந்த சாதனையாளர்

மக்கள்வங்கி 2004 இல் சிசுஉதான சாதனையாளர் போட்டியில் கல்வி, விளையாட்டு, சங்கீதம், நடனம், பேச்சு, நாடகம் போன்ற பலதரப்பட்ட துறைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற சாதனையாளர்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கீழ் காணப்படும் ஐவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செல்வி. உஷா தியாகராசா மு/வித்தி



யானந்தா கல்லூரி முள்ளியவளை.

உமாம கேஸ்வரன் - சுரேஸ் மு/கொக்கிளாய் தமிழ்க்கலவன் பாடசாலை.


கிருஷ்ணமேனன், விவேகானந்தன் மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை.

எம்.ஜெரோம் மு/மகாவித்தியாலயம், முல்லைத்தீவு.

செல்வி. வைதேகி - தேவராசா மு/மல்லாவி மத்தியகல்லூரி யோகபுரம்.

இவர்களுக்கான விருதுகள் மற்றும் சான்றிதழ்களும் 11.07.2005 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த விருது வழங்கும் வைபவத்தில் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 135 சாதனையாளர்களில் இவ் ஐவரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். (08)

## வினைத்திறனுடைய செயற்பாடே விளையாட்டை மேம்படுத்தும் அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்



யுத்த காலத்தில் மிகநெருக்கடிக்கு மத்தியிலும் கிளிநொச்சியில் மிகச் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டது. வன்னி ஐக்கிய விளையாட்டுச்சங்கம் எனும் அமைப்பினால் நடாத்தப்பட்ட இந்தப்போட்டிகள் மிகச்சிறப்பாக நடந்ததை நானறிவேன். அமரர் பொன்.வினாயகமூர்த்தியின் அர்ப்பணிப்பும், பங்களிப்பும் அப்போட்டிகளின் வெற்றிக்குக்காரணமாக அமைந்திருந்தது. அவ்வாறான போட்டிகளை மீண்டும் இம்மண்ணில் நடாத்துவதற்கான ஒரு அமைப்பாக கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திச்சங்கம் அமைய வேண்டுமென உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் என தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கீ.பாப்பா, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச்சங்கத்தின் அங்குரார்ப்பண கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார். கிளிநொச்சிமாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் ம.பத்மநாதன் மற்றும் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி அ.கனகராஜா உட்பட விளையாட்டு அதிகாரிகள், விளையாட்டுச்சங்க அங்கத்தவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பாப்பா அங்கு மேலும் உரையாற்றுகையில்; இம்முறை கிளிநொச்சியில் நடைபெற்ற உதைபந்தாட்ட சம்மேளனத்தின் இளையோருக்கான போட்டி ஒன்றை அவதானித்தபோது வீரர்களின் விளையாட்டுத்திறன் உயர்வடைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. ஆனால் அந்தப் போட்டிக்குரிய ஒழுங்கமைப்பில், முகாமைத்துவத்தில் இருந்த குறைபாடுகளால் தொடர்ந்து அடுத்தகட்ட சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை வீரர்கள் இழந்திருந்தமை கவலையளிக்கிறது. எனவே குறித்த சங்கங்கள் தமது நடவடிக்கைகளை வினைத்திறனுடையதாக்குவதன் மூலம் விளையாட்டின் தரத்தை உயர்த்துவதற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.




(சி)

## முக்கோண ஒரு நாள் போட்டி மே.தீவுக்கு முதல் வெற்றி

சிறிலங்காவில் நடைபெற்றுவரும் மும்முனை கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற சிறிலங்காவுக்கு எதிரான கடைசி லீக் போட்டியில் மேற்கிந்தியத்தீவு சிறிலங்கா அணியை 33 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொழும்பு பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு-பகலாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவு ஏழு விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சந்தர்போல் 57, யோஸ்பி 58 ஓட்டங்களையும், பாங்ஸ் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சந்தன இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். நான்கு விக்கெட்டுக்கள் ரன் அவுட் முறையில் இழக்கப்பட்டது.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிறிலங்கா மேற்கிந்தியத்தீவின் அபாரக் களத்தடுப்பு, பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது 47 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஆனல்ட் 59 ஓட்டங்களையும், தரங்க 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பவல், ஸ்மித், பாங்ஸ், டினோறின் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பாங்ஸ் தெரிவானார்.



இன்று நடைபெறவுள்ள கடைசி லீக் போட்டியில் இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதவுள்ளன. இதில் வெற்றிபெறும் அணியே இறு திப் போட்டியில் சிறிலங்கா அணியுடன் மோதும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஷஸ் கிண்ண இரண்டாவது டெஸ்ட் போட்டி

### அவுஸ்.வெற்றிபெற 282 ஓட்ட இலக்கு






இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் ஆஷஸ் கிண்ணத்துக்கான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றிபெற 282 ஓட்டம் என்ற வெற்றி இலக்கை இங்கிலாந்து நிர்ணயித்துள்ளது.வெற்றியிலக்கு நோக்கி ஆடும் அவுஸ்திரேலிய அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இங்கிலாந்து முதல் இனிங்சிஸ் 407 ஓட்டம். துடுப்பாட்டத்தில் ரெஸ்கொதிக் 90, பிளிண்டொப் 68, பீற்றர்சன் 71 ஓட்டங்கள் முறையே அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்து வீச்சில் வோர்ன் நான்கு விக்கெட்டுக்களையும், கஸ்பரோவிச் மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.அவுஸ்திரேலியா முதல் இனிங்சிஸ் 308 ஓட்டம். துடுப்பாட்டத்தில் லாங்கர் 82, பொண்டிங் 61, கில்கிறிஸ்ட் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்து வீச்சில் கைல்ஸ், பிளிண்டொப் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

99 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய இங்கிலாந்து 182 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. பிளிண்டொப் 73 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றார்.

பந்து வீச்சில் ஷேன் வோர்ன் 23.1 ஓவர் பந்து வீசி 46 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பிரெட்லீ நான்கு விக்கெட்டை வீழ்த்தினார்.



## சிந்தனைக்கு

ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகிவரும் எமது தாயகத்தை, ஒரு உன்னதமான-மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 07.08.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## வெறுங்கையுடன்...!

நோர்வேயின் துணைவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனின் கிளிநொச்சிக்கான பயணம் சம்பிரதாய பூர்வமானதொரு விஜயம் போன்றதாகவே அமைந்தது என்பது போல் அது தொடர்பாக வெளியாகியுள்ள தகவல்கள் உணர்த்துவதாய் உள்ளன. அதாவது இலங்கைக்கான நான்கு நாள் பயண நிகழ்ச்சி நிரலில் வன்னிக்கும் ஒருநாள் சென்று வருதல் என்பது மட்டுமே போலுள்ளது.

ஏனெனில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த விதார் ஹெல்கேசன் அவர்கள் ஊடகங்களுக்கு அளித்த செவ்வியில், சனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து புதிய யோசனைகள் எதனையும் கொண்டு வரவில்லை எனக் கூறியிருப்பதும், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் நிலைமைகள் விளக்கப்பட்டமை தொடர்பாகவே பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளதை விளக்கியுள்ளமையும் இதனையே தெளிவுபடுத்துவதாவுள்ளது.

இது ஒருவகையில் ஏமாற்றம் அளிக்கும் ஒரு விடயமே ஆகும். ஏனெனில் சமாதான முயற்சிகள் மிகவும் நெருக்கடியான தொரு நிலையில் இலங்கை வந்துள்ள நோர்வே துணை வெளிவிவகார அமைச்சர் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு தடையாகவுள்ள பிரச்சினைகள் தொடர்பாக முன்னேற்றகரமான யோசனைகள் எதாவது குறித்துப் பரிசீலிக்க முற்படலாம் என்ற ரீதியில் இருந்த எதிர்பார்க்கை பயனற்றதொன்றாகியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போதைய சூழ்நிலையில் சமாதான பேச்சுக்கள் குறித்து பேசுவதில் ஆர்வம் காட்டவில்லை என்பதே இன்றைய நிலைமையாகும். அதாவது சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமானால் சனாதிபதி சந்திரிகா முன்னேற்றகரமான யோசனைகள் எதனையாவது முன்வைத்தல் வேண்டும். ஆனால் அத்தகைய யோசனைகள் எதனையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டிருக்கவில்லை. தற்போதைய சூழ்நிலையில் பேச்சு வார்த்தை ஆரம்பிப்பது மட்டுமல்ல பேச்சுவார்த்தை பற்றிப்பேசுவதையே அவர் விரும்பவில்லை. அது தமக்குப்பாதகமான சூழ்நிலையை உருவாக்கிவிடும் என அவர் கருதுகின்றார்.

முன்னதாக சர்வதேச சமூகமும் பெரும் முயற்சி மேற்கொண்டு உடன்பாடு காணப்பட்ட பொதுக் கட்டமைப்பு விவகாரம் நீதிமன்றத் தடையால் முடங்கிப் போயுள்ளது.இது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு வாய்ப்பானதொரு நிகழ்வாகிவிட்டது. நோர்வே தரப்பாயினும் சரி வேறு யாராக இருப்பினும் சரி இன்று பொதுக்கட்டமைப்புக்குறித்து அளவிற்கதிகமாய் பேசிவிடமுடியாது.

இதேசமயம், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இனிமேலும் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்பதை புலிகள் தெளிவு படுத்திவிட்டனர். ஒரு வகையில் பார்த்தால் விடுதலைப்புலிகள் இவ்விடயம் முடிவுக்கு வந்துவிட்டதொன்றாகவே கருதுகின்றனர்.


இந்நிலையில் சமாதான முயற்சிகளோ அன்றிப் பொதுக்கட்டமைப்பு விடயத்திலோ முன்னேற்றம் ஏதும் ஏற்படுவதற்கு வாய்ப்பிருப்பதாக இல்லை. அதிலும் குறிப்பாக சிறிலங்காவில் சனாதிபதித்தேர்தலோ அன்றிப் பொதுத்தேர்தல் ஒன்றோ நடைபெறும் வரையில் இந்நிலையில் மாற்றம் ஏதும் எதிர்பார்ப்பதற்கில்லை. ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்களின் முழுக்கவனமும் தேர்தல் பக்கமே திரும்பியுள்ளதனால் தேர்தலில் வெற்றிபெற பேய்கள் -பிசாசுகளுடன் கூட்டுச்சேர்வது பற்றியே அவர்களின் சிந்தனை முழுவதும் உள்ளது.

ஆனால் களநிலவரமும் தமிழ்மக்களின் உணர்வுகளும் வேறு பட்டவையாக உள்ளன. தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினையும் அவர்களின் பாதுகாப்பும் தற்பொழுது கேள்விக்குள்ளாகியவையாகியுள்ளன. அதாவது பொதுக்கட்டமைப்பின் முடக்கம், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப்பணிகளை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ள அதேவேளை, சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் யுத்த நிறுத்தத்திற்கு மாறான நடவடிக்கைகள் பெரும் பதற்றத்தை தோற்றுவிப்பவையாகியுள்ளன.

அதாவது சமாதான முயற்சிகளில் காணப்படாத முன்னேற்றம் யுத்தநிறுத்தத்திற்கு எதிரான சிறிலங்கா படைத்தரப்பின் நடவடிக்கைகளும்-சிங்களப் பேரின சக்திகளின் அமைதிக்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகளுக்கு அவை வழங்கிவரும் பாதுகாப்பும் தமிழ் மக்கள் மத்தில் சமாதானத்தின் மீதான ஒட்டுமொத்த நம்பிக்கைகளையும் இழக்கச்செய்துள்ளது.

இந்நிலையில் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே உயர்மட்டக்குழுவொன்றும் எதுவித புதிய யோசனைகளும் இன்றி விஜயமொன்றை மேற்கொண்டுவிட்டு திரும்பியுள்ளமையானது தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்றத்தையும் சமாதானத்தின் எதிர்காலம்குறித்து நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துவதாகவே உள்ளது. அதாவது நம்பிக்கைகொள்ள எதுவும் இல்லை என்ற தமிழ் மக்களின் உணர்வு மேலும் வலுப்படுத்துவதாகியுள்ளது.

## யாழ் குடாவில் வேதாளமாக ?



# அமைச்சரவையில் உள்ளோரில் 60 வீதமானோர் ஊழல் மிக்கவர்கள்

### — பதவி விலகிய பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கூட்டணி அரசாங்கத்தின் அமைச்சரவையிலிருக்கும் அமைச்சர்களில் 60 சதவீதமானவர்கள் ஊழல் மிக்கவர்கள் என்றும் அது தொடர்பில் அவதானத்துடன் இருககுமாறும் பதவியிலிருந்து விலகிய பிரதியமைச்சர் சிறிலங்கா சனாதிபதிக்கு எழுதியகடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பிரதியமைச்சர் பதவியிலிருந்தும், நிவித்திகல தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் விலகிய இரத்தினபுரி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எச்.எல். பிரேமலால் ஜயசேகரவே சனாதிபதி சந்திரிகாவிற்குக் கடிதம் அனுப்பியவராவார்.

இம்மாதம் இரண்டாம் திகதியிடப்பட்டு அனுப்பியுள்ள கடிதத்தில்,

கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்த 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இதுவரை மகாவலி அபிவிருத்தியமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும், அந்த அமைச்சின் அதிகாரிகளும் தன்னை எந்தவொரு வேலைத்திட்டத்தையும் செயற்படுத்த இடமளிக்கவில்லை என அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தில் சில அரசியல்வாதிகள் அடிக்கடி நிவித்திகல தேர்தல் தொகுதியின் செயற்பாடுகளில் தலையிட்டு முட்டுக்கட்டைகளைப் போடுவதால் நிவித்திகல தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்தும் தான் விலகுவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், ஏனைய அமைச்சுக்களினூடாகவும் இதுவரை மக்களுக்கு எதுவிதமான சேவையும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தனது நோக்கம் பணம் சம்பாதிப்பதல்ல. மக்களுக்கு சேவையாற்றுவதே என்று குறிப்பிட்ட பிரேமலால் ஜயசேகர பெயரளவில் இருக்கும் பிரதியமைச்சர் பதவியிலிருந்துதான் விலகுவதாகக் கூறியுள்ளார்.

# சனாதிபதித் தேர்தலுக்கு நிதிதிரட்ட அமெ.க்கு ஜே.வி.பி.யினர் இரகசியப் பயணம்

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான நிதியுதவிகளைத் திரட்டுவதற்காக ஜே.வி.பி.யின் முன்னாள் பிரதியமைச்சரான சுனில் ஹந்துன்னெத்தி இருவார கால விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்கா சென்று திரும்பியுள்ளார்.

வோஷிங்டன் மற்றும் நியூயோர்க்கில் தங்கியிருந்து இவர் தேவையான நிதிகளைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது.

அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்து கொள்ளாது இந்தப் பயணத்திற்கு கனிஷ்ட உறுப்பினர்களை அனுப்பியது இந்த விடயத்தை இரகசியமாக வைத்துக் கொள்வதற்காகவே என்றும் கூறப்படுகிறது.

இருவாரங்களுக்கு முன்னர் அமெரிக்காவிற்குச் சென்ற முன்னாள் பிரதியமைச்சர் கடந்த வியாழக்கிழமை சிங்கப்பூர் ஊடாக நாடு திரும்பியதாகவும் தெரியவந்துள்ளது.

### — சனாதிபதித் தேர்தலில் ஆதரவு யாருக்கு? —

# இ.தொ.காங்கிரஸ்,முஸ்லிம் காங்கிரஸ் பிரதான கட்சிகளுடனும் பேச்சு!

எதிர்வரும் தேர்தலில் சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும். தற்போது கடுமையாகப்போட்டியிட்டு வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரு பிரதான கட்சிகளினதும் வேட்பாளர்கள் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களை இந்நாட்களில் சந்தித்துத்தங்களின் கட்சிகளுக்கு அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக இரகசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் கடந்த செவ்வாய்க்கிழமை சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து தமது கட்சியின் ஆதரவைச் சிறிலங்கா சதந்திரக் கட்சிக்குப் பெற்றுத்தருவது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

அதேதினம் இரவு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த ஆறுமுகம் தொண்டமான், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கான நிபந்தனைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

சவூதி அரேபிய மன்னர் பாக்த்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ளச் சென்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தப் பயணத்தில் அவருடன் சென்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமுடன் அவர்களின் கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது குறித்து விரிவாகக் கலந்துரையாடியிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிக்கின்றது.

பின்னர் ரவூப் ஹக்கீம் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் இவ்விடயம் குறித்து நீண்டநேரம் ஆராய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கனேடிய கன்சவேட்டிவ் கட்சி பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பி நிலவரங்களை அறியவேண்டும்

## கட்சிப் பிரதித் தலைவரிடம் கனேடிய தமிழர்கள் கோரிக்கை

கனேடிய கன்சவேட்டிவ் கட்சி தனது பிரதிநிதிகள் குழுவை இலங் கைக்கு அனுப்பி அங்குள்ள நிலவரங் களை சுயாதீனமான அறிய முயற்சி யெடுக்க வேண்டுமென கனேடிய பிரதி எதிர்க்கட்சித் தலைவரான பீற்றர் மக்கேயிடம் கனேடிய தமிழ்மக்கள் நேரில் வேண்டுகோள் விடுத்தனர்.

நேற்று முன்தினம் ரொரன்ரோ நகரிலுள்ள ஸ்காபுரோ தென்மேற்குத் தொகுதியின் வேட்பாளரான வின் சன்ற் வீரசுதந்திரத்திற்கு ஆதரவு திரட்டும் முகமாக ஒருநாள் முழுநேரப் பிரச்சாரத்தை மேற்கொண்ட கனே டியப் பாராளுமன்றத்தின் பிரதி எதிர்க் கட்சித் தலைவரான பீற்றர் மக்கே அத்தொகுதியிலுள்ள தேவாலயம், இந்து ஆலயம், பள்ளிவாசல் என்பன வற்றுக்கும் சமுகமளித்து அங்குள்ள பக்தர்களிடமும் உரையாடினார்.

இவ்வகையில் அத் தொகுதியி லுள்ள ஆலயமான கனடா கந்த சுவாமி கோவில் ஆலயத்திற்கு பீற்றர் மக்கே சமுகமளித்த போது அங்குள்ள பக்தர்களிடமும் அளவ ளாவினார். அச்சமயத்திலேயே ஆலய வழிபாட்டிற்கு வருகை தந்தி ருந்த முதியவரொருவர், கன்ச வேட்டிவ் கட்சியானது தனது பிரதி நிதிகள் குழுவொன்றை இலங் கைக்குச் சுயாதீனமாக அனுப்பி இங்கிருந்து செல்லும் உதவிகள் அங்கு உரிய வகையில் சென்ற டைகின்றனவா என்பதையும் தமிழர் கள் குறித்து சிறிலங்கா அரசு செய் யும் பிரச்சாரங்கள் குறித்த உண்மை களையும் அறிய வேண்டுமெனக் கேட்டார்.



அக்கோரிக்கையை மிகவும் அவ தானமாகச் செவிமடுத்த பீற்றர் மக்கே மேற்படி கோரிக்கையை உரிய வர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்தார். இதே வேளை பீற்றர்மக்கேயிடம் உரை யாடிய வேறு சில தமிழர்கள், தமிழர் களின் குடும்பப்பாரம்பரியம்,வளர்ப்பு முறை போன்றவை கன்சவேட்டிவ் பார்வை சார்ந்தவையே என்றும், கட்சி யின் கொள்கையை ஒத்த கருத்துக் களையே கட்சியின் உறுப்பினர்கள் வெளிக்கொணர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

கனேடிய பாராளுமன்றத்திற்கான தேர்தல் இதுவரை அறிவிக்கப்படாத போதும், அடுத்த வருட ஆரம்பத்தில் அல்லது இவ்வருட இறுதியில் தேர் தல் அறிவிக்கப்படலாம் என்ற எதிர் பார்ப்பில் சகல கட்சிகளிடமும் காணப் படுகிறது.

# வன்னிப்பகுதி அரிசி அரைக்கும்ஆலைகளின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்

நாளை காலை பத்துமணிக்கு வன்னிப் பகுதியிலுள்ள அனைத்து அரிசி அரைக்கும் ஆலைகளின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலும், பயிற்சிப் பட்டறையும் கிளி. பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஆலைத் தொழில்நுட்பம், கட்டடத் தொழில் நுட்பம், சுகாதார நடை முறைகள் தொடர்பான கருத்துரைகள் உரியவர்களால் நடாத்தப் படவுள்ளதுடன், இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டதற்கான சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் அனைத்து அரிசி அரைக்கும் ஆலைகளின் உரிமையாளர்களும் கலந்து பயன்பெறுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# சோமாலியாவில் கடத்தப்பட்ட கப்பல் சில தினங்களில் விடுவிக்கப்படும்

## ஐ.நா அதிகாரி தெரிவிப்பு

ஒரு மாதத்திற்கு முன்னர் சோமாலியா கடற்கொள்ளைக்காரர்களால் கடத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்திற்கு சொந்தமான கப்பலை விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான அதிகாரி ரீன் மக்களின் கென்ய தலைநகர் நைரோபியில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மூன்று தினங்களுக்குள் இந்த விடுவிப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.இந்தக் கப்பல் பத்து மாலுமிகளுடன் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் கடல் கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டது.இந்தக் கப்பலின் தலைவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாலிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் விடுதலை கோரி இராஜதந்திர முறையில் இலங்கை அரசாங்கமும் முயற்சி செய்த பொழுதும், அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# வீடுவீடாகச் சென்று பிரச்சாரத்தை ஐ.தே.க நேற்றுஆரம்பித்தது!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தமது சனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களின் ஒரு கட்டமாக சனநாயக உரிமை என்ற தொனியில் வீடுவீடாகச் சென்று மக்களின் குறைகளை கேட்கும் திட்டத்தை நேற்று மொரட்டுவையில் ஆரம்பித்தது. இதன்போது பாரா ளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஸ் மக்களின் வீடுகளுக்கு சென்று தமது பிரச்சார பணிகளில் ஈடுபட்டார். இதன் போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளும் வழங்கப் பட்டன. இதேவேளை இந்தத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் முன் னெடுத்துச் செல்ல நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இதற் கிடையில் கொழும்பு முகத்து வாரத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் ஒன்றை நேற்று நடத்தினர். இதன்போது அவர்கள் அரசாங்க மற்றும் எதிர் கட்சி அரசியல்வாதி களின் மீது குற்றச்சாட்டுகளை முன் வைத்தனர்.

# யுத்தநிறுத்தத்தைப் பாதுகாக்க ராஜபக்ஷ-ரணில்கூட்டுப்பிரகடனம்?

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் நிலவும் குறைபாடுகளைச் சீர்படுத்தி யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கொண்டு செல்வதென கூட்டுப்பிரகடனமொன்றை வெளி யிடுவது சம்பந்தமாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க இணக்கம் தெரிவித் துள்ளதாகத் தெரிய வருகிறது.

பிரதமரின் வேண்டுகோளுக்கு அமைய வெளியிடப்படவுள்ள இக் கூட்டுப் பிரகடனத்தில் பிரதான கட்சிகள் இரண்டின் சார்பில் போட்டி யிடும் சனாதிபதி வேட்பாளர்கள் என்ற வகையிலேயே இவ்விருவரும் கைச்சாத்திடவுள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பாதுகாத்து அதனைத் தொடர்ந்து கொண்டு நடத்துவதென்று இரு சனாதிபதி வேட்பாளர்களினூ டாகப்பொதுவான பிரகடனம் ஒன்றை வெளியிடச் செய்வதற்கான பணியில் யுத்த எதிர்ப்பு தேசிய முன்னணியின் தலைவர் குமார் ரூபசிங்க இருபக்க இணைப்பாளராக இருந்து செயற் படுகிறார்.

பிரதமரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இந்தப் பொதுப் பிரகடனத்திற்கு எதிர்க்கட்சித் தலைவரின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக குமார் ரூபசிங்க எதிர்க்கட்சித் தலைவருடன் மிக நீண்ட நேரம் உரையாடியுள்ளார்.

இவ்விரு சனாதிபதி வேட்பாளர் களின் கையெழுத்துடன் வெளியாகும் இந்தப் பொதுப்பிரகடனம் இன்னும் சில தினங்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### யாழ்..

தொடர்ந்து நண்பகல் ஒரு மணிய ளவில் அசம்பாவிதங்கள் இடம் பெற்ற இராணுவப் பகுதிக்கு பலத்த இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் வந்து அங்கு நிலைமைகளைப் பார்வையிட்டார். தொடர்ந்து மாலை 5.00 மணியளவில் யாழ் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதி காரிகளைச் சந்தித்துக் கலந்து ரையாடினார்.

இணுவிலில் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட அசம் பாவிதங்களை பார்வையிடுவதற்காவே அவர் இங்கு விஜயம் செய்ததாக கூறப்படுகிறது. (33)

### வனவள...

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் முறை யிடப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் தெரி வித்துள்ளனர். (10)

### த.ம.பேரவை...

தலைமை அதிகாரியான கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி ரியர்அட்மிரல் வசந்த கருணா கொடவையும் ஏனைய அதிகாரி களையும் சந்தித்து படைக்குறைப்புப் பற்றிப்பேசினார் என்று தெரிவிக்கப் பட்டது.படைக்குறைப்புத் தொடர்பாக சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து படைத்தரப் பினர் அச்சந்திப்பின்போது கருத்து வெளியிட்டதாகக் கூறப்பட்டது. (25)

### தமிழீழ...

ஒவ்வொரு ஆளும் பிடி கட்டளை யின்றி தமிழீழ சுகாதாரசேவை அலுவலகரால் அல்லது காவல் துறை அலுவலகரால் பிடிக்கப்படலாம் எனத் தெரிவித்தார். மேலும் உணவுச் சட்ட ஒழுங்கின்படி தவறொன்றை இழைக்கும் ஒருவர் மீது அவ் விடத்தில் வைத்துக் குற்றப் பணம் (Spot fine)அறவிடுவதற்கான ஏற்பாடுகளும் உள்ளன என தெரி வித்ததுடன், உரிய இடத்தில் வைத்து குற்றப்பணம் அறவிடும் உரிமை வீதிப்போக்குவரத்து கண்காணிப் பிலுள்ள காவல்துறை அலுவலக ருக்கும், உணவுச்சட்டங்களால் ஒழு ங்கு விதிகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் சுகாதார சேவை அலுவலகருக்கும் மட்டுமே உள்ளதெனவும் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் மாவட்ட, பிரதேச இணைப்பாளர் களின் சந்தேகங்களிற்கும் பதிலளித்த துடன், எதிர்வரும் காலங்களில் புதிய ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

### குடியிருப்பு...

காலத்தில் இராணுவ வாகனம் மோதி பலியானவர்கள், இராணுவ சூட்டுச்சம்பவத்தில் பலியானவர்கள், காயம் அடைந்தவர்கள் எனத் தொடர்ந்த வண்ணம் உள்ளன, இரா ணுவத்தினரின் இவ்வாறான செயல்களை தடுத்து நிறுத்துவதற்கு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் இராணு வத்தின் யுத்தமீறல் சம்பவங்கள் தொடர்கின்றன. இவ்வாறான சம்ப வங்களுக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்காது விட்டால் இராணுவத்தை வெளியேற்ற மக்கள் போராட்டம் வெடிக்கும் என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதேவேளை கடந்த வியாழக் கிழமை துப்பாக்கிச் சூட்டுச்சம்ப வத்தில் உயிரிழந்த ஜெயசீலன் சாந்தரூபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்றைய தினம் அனைத்து அமைப்புக்களும் தங்கள் அலுவலகங்களில் கறுப்புக் கொடிகளை பறக்கவிடுமாறு கேட்டுக் கொள்வதோடு, இறுதிநிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் தமது உறவினை இழந்து பிரிவால் துயருறும் ஜெ.சாந்தரூபன் குடும்பத் திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு, துயரிலும் பங்குகொள்கின்றோம் என யாழ். மாவட்ட பொது அமைப்புக் களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக் கையில் தெரிவித்துள்ளது.

### சனாதிபதி....

அறிவிப்பிற்கு ஓரளவு அழுத்தத் தை ஏற்படுத்துமென நம்பியபோதிலும். உயர்நீதிமன்றத்தின் கருத்து தனக்கு சாதகமாக அமையாவிடத்து பாராளுமன்றத்தைக் கலைப்பதே அரசியல் ரீதியாக எடுக்கக்கூடிய சிறந்த முடிவு என அவர் தனக்கு நெருக்கமான சில பிரதியமைச்சர் களிடம் தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தால் அடுத்த பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக இருக்கப்போவது அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவே. இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப் பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ வெறும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிட வேண்டிய நிலையே ஏற்படும்.

இவ்வாண்டிற்குள் சனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் அதில் கட்டா யமாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றியீட்டப் போவதாக சனாதிபதியினால் மேற் கொள்ளப்பட்ட கணிப்பீட்டுத் தகவல் கள் தெரிவிப்பதாக அவர் தனக்கு நெருக்கமான சில பிரதியமைச்சர் களிடமும், ஆலோசகர்களிடமும் தெரி வித்துள்ளார்.

இந்நிலையில் பொதுத் தேர்த லொன்று நடத்தப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சியினால் தனித்துப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்பதால், சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கு சக்திமிக்க எதிர்க்கட்சி என்ற நிலை கிட்டும் என்பதே அவரின் கணிப்பாகும்.

பொதுத் தேர்தலின் பின்னர் சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் ரணில் விக்கிரமசிங்க அதில் வெற்றி பெற்றாலும் அரசியலமைப்பின் பிரகாரம் ஒருவருடத்திற்கு அரசாங்கத் தைக் கலைக்க முடியாதென்பதால் பலமிக்க எதிர்க்கட்சியுடன் சிறு பான்மை அரசாங்கத்தை அவரால் கொண்டு நடத்துவது சிரமமாக இருக்கும் என்பதே சனாதிபதியின் கருத்தாகும்.

இந்த அனைத்து விடயங் களையும் ஆராய்ந்த பின்னரே பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானத்தை சனாதிபதி எடுத் திருப்பதாகத் தெரியவருகிறது.

பொதுத்தேர்தலொன்று நடத்தப் படுமானால் பண்டாரநாயக்க குடும்பத் திலிருந்து நழுவவிருக்கும் அரசியல் அதிகாரத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்பதற்காகவே பொதுத்தேர்த லொன்றுக்குச் செல்ல வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டி ருப்பதாக வேறு சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் சம்பந்தமாக சனாதி பதிக்கு ஆலோசனை வழங்கியுள்ள அவரின் ஆலோசகர்கள், தேர்தல் ஆணையாளர் சனாதிபதித் தேர்தலுக் கான வேட்புமனுக்களைக் கோரு வதற்கு முன்னதாக பாராளுமன்றத் தைக் கலைக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் சனாதிபதி தனது பதவியை விட்டுவிலக வேண்டும். அந்நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதில் சனாதிபதிக்குப் பொறுப்பேற்பார். அப்போது பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கான வாய்ப்பு அவருக்குக் கிட்டாது என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.